




# தினபூமி

thinaboomi.com











**கைது செய்ய முயன்ற போது அமெரிக்காவில் இந்தியரை சுட்டுக்கொன்ற காவல்துறை**


...2-ம் பக்கம்

**பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தல்: பினராயி, நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் வாக்களிப்பு**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். கிரிக்கெட் சீசனில் அதிக முறை 400 ரன்களை கடந்த வீரர்களில் விராட் கோலி முதலிடம்**

...7-ம் பக்கம்





சித்திரை திருவிழாவையொட்டி நேற்று அதிகாலை பூப்பல்லக்கில் எழுந்தருளிய கள்ளழகர், அழகர் மலையை நோக்கி புறப்பட்டு சென்றார். அப்போது மூன்று மாவடி, ரேஸ் கோர்ஸ், தாமரை தொட்டி, புதூர் உள்ளிட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கானோர் காத்திருந்து கள்ளழகரை தரிசனம் செய்தனர்.

### மதுரை சித்திரை திருவிழா நிறைவு;

# அழகர் மலை சென்றார் கள்ளழகர்: பக்தர்கள் திரளாக தரிசனம்

மதுரை, ஏப் 27-

சித்திரை திருவிழா நிறைவு பெற்றதை தொடர்ந்து நேற்று அழகர்மலையை சென்றடைந்தார் கள்ளழகர். வழிநெடுகிலும் பக்தர்கள் திரண்டு கள்ளழகரை தரிசனம் செய்தனர்.

சித்திரையில் முத்திரை பதிக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா கடந்த 12-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாள் விழாவில் தினமும் சுவாமி-அம்பாள் வீதி உலா நடைபெற்றது. முத்தாய்ப்பாக கடந்த 21-ம் தேதி மீனாட்சி-சுந்தரேசுவரர் திருக் கல்யாணமும், 22-ம் தேதி தேரோட்டமும் நடந்தது.

அதோடு மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா முடிவுக்கு வந்த நிலையில் கள்ளழகர் கோவில் சித்திரை திருவிழா தொடங்கியது. கடந்த 21-ம் தேதி தங்கப்பல்லக்கில் கள்ளழகர் பக்தர்கள் வெள்ளத்தில் மதுரைக்கு புறப்பட்டார். வழிநெடுகிலும் 450-க்கும் மேற்பட்ட மண்டகடப்படிகளில் எழுந்தருளி கள்ளழகர் அருள்பாலித்தார்.

மறுநாள் 22-ம் தேதி புதூரில் கள்ளழகரை பக்தர்கள் எதிர்கொண்டு வரவேற்கும் எதிர்சேவை நிகழ்ச்சி நடந்தது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அதனை தொடர்ந்து தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோவிலில் கள்ளழகர் திருமஞ்சனம் நிகழ்ச்சி நடந்தது.

தொடர்ந்து 23-ம் தேதி அதிகாலை கோவிலில் இருந்து தங்க குதிரை வாகனத்தில் புறப்பட்ட கள்ளழகர் பச்சை பட்டு உடுத்தி காலை 6 மணியளவில் வைகை ஆற்றில் இறங்கி பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இதில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். அன்று மதியம் ராமராயர் மண்டபத்தில் கள்ளழகருக்கு தீர்த்தவாரி நிகழ்ச்சி நடந்தது.

இரவு வண்டியூர் வீரராகவ பெருமாள் கோவிலில் கள்ளழகர் எழுந்தருளினார். இரவு முழுவதும் அங்கு திருவிழா களை கட்டியது. 24-ம் தேதி காலை சேஷ வாகனத்தில் அருள்பாலித்த கள்ளழகர் தேனூர் மண்டபத்தில் மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. அன்று இரவு ராமராயர் மண்டபத்தில் விடிய, விடிய தசாவதார கோலத்தில் கள்ளழகர் காட்சி அளித்தார்.

அதை தொடர்ந்து நேற்று முன்தினம் (25-ம் தேதி) காலை மோகினி அலங்காரத்தில் பக்தி உலா நடந்தது. பின்னர் ராஜாங்க அலங்காரத்தில் அருள் பாலித்த கள்ளழகர் தடம் பார்க்கும் நிகழ்வுக்காக மீண்டும் வைகையாற்று பகுதியில் எழுந்தருளினார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு தல்லாகுளத்தில் உள்ள ராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபத்திற்கு வந்த கள்ளழகருக்கு திருமஞ்சனம் நடந்தது. அதை தொடர்ந்து நேற்று அதிகாலை 2.30 மணியளவில் பூப்பல்லக்கில் எழுந்தருளிய கள்ளழகர் அழகர் மலையை நோக்கி புறப்பாடானார்.

காலையில் மூன்று மாவடி, ரேஸ் கோர்ஸ், தாமரை தொட்டி, புதூர் உள்ளிட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் காத்திருந்து கள்ளழகரை தரிசனம் செய்தனர். அப்போது சர்க்கரை தீபம் ஏந்தி வழி பட்டனர். வழிநெடுகிலும் மண்டகப்படிகளில் எழுந்தருளிய கள்ளழகரை சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கண்டுகளித்தனர்.

அதை தொடர்ந்து அப்பன் திருப்பதி கோவிலில் கள்ளழகர் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பின்னர் கள்ளழகர் தனது இருப்பிடமான அழகர் மலையை சென்றடைந்தார். இதனை தொடர்ந்து இந்த ஆண்டு சித்திரை திருவிழா நிறைவுபெற்றது.

### இ.வி.எம்.-ல் பதிவான வாக்குகளோடு ஒப்புகை சீட்டுகளை

# 100 சதவீதம் எண்ணக்கோரிய கோரிக்கை நிராகரிப்பு

### மனுக்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்தது சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஏப். 27-

தேர்தலின் போது இ.வி.எம்-ல் பதிவான வாக்குகளோடு விவிபாட் ஒப்புகை சீட்டை 100 சதவீதம் எண்ணக்கோரிய வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்து தீர்பளித்த சுப்ரீம் கோர்ட், பழைய வாக்குச் சீட்டு முறைக்கு மீண்டும் செல்ல முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

**2013-ல் அறிமுகம்...**

யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்யும் விவிபாட் இயந்திரங்கள் கடந்த 2013-ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டன. முதலில் ஒரு சட்டப்பேரவைத் தொகுதியில் குறிப்பிட்ட ஒரு வாக்குச்சாவடியின் விவிபாட் இயந்திர ஒப்புகை சீட்டுகள் மட்டும் எண்ணப்பட்டன. 2019-ல் சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவின்படி தற்போது ஒரு சட்டப்பேரவைத் தொகுதியில் 5 வாக்குச்சாவடிகளின் விவிபாட் இயந்திரங்களின் ஒப்புகை சீட்டுகள் எண்ணப்படுகின்றன.

**மனுக்கள் தாக்கல்...**

இந்தச் சூழலில் விவிபாட் இயந்திரங்களின் ஒப்புகை சீட்டுகளை 100 சதவீதம் எண்ணி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளுடன் ஒப்பிட வேண்டும் என்று கோரி ஜனநாயக சீர்திருத்த சங்கம் மற்றும் அபய் பக்சந்த், அருண் குமார் அகர்வால் ஆகியோர் மனுக்களை தாக்கல் செய்தனர். இந்த வழக்கை நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, தீபாங்கர் தத்தா அமர்வு விசாரித்தது. கடந்த 18-ம் தேதி வாதங்கள் நிறைவடைந்தன. இதைத் தொடர்ந்து கடந்த 24-ம் தேதி தலைமைத் தேர்தல் ஆணைய அதிகாரிகள், தொழில்நுட்பம் சார்ந்த பல்வேறு விவகாரங்கள் குறித்து நீதிபதிகளிடம் விளக்கம் அளித்தனர். இதைத் தொடர்ந்து இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று (ஏப்.26) அளிக்கப்பட்டது.

**கோரிக்கை நிராகரிப்பு...**

தீர்ப்பின் போது, மீண்டும் பழைய வாக்குச்சீட்டு முறையே வேண்டும் என்று மனுதாரர்கள் கோரிக்கையை சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது. மேலும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், “மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கன்ட்ரோல் யூனிட், விவிபாட் இயந்திரம் ஆகிய மூன்றிலும் நிறைய சந்தேகங்களை எழுப்பி நிறைய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்கு தேர்தல் ஆணையம் கொடுத்துள்ள தொழில்நுட்ப ரீதியான, அறிவியல் ரீதியான ஆதாரங்களையும், வாதங்களையும் நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம்.

**மேலும் அதிகரிக்க....**

எனவே, மனுதாரர்கள் தரப்பில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கன்ட்ரோல் யூனிட், விவிபாட் இயந்திரம் குறித்து வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளும் நிராகரிக்கப்படுகின்றன. ஆனாலும், இந்த இயந்திரங்களின் நம்பகத் தன்மையை மேலும் அதிகரிக்க இந்திய தேர்தல் ஆணையம் தேவையான முடிவுகளை எடுக்கலாம். பழைய வாக்குச் சீட்டு முறைக்கு மீண்டும் செல்ல முடியாது. தற்போதைய நடைமுறையே சரியாக தான் உள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் நாங்கள் தலையிட விரும்பவில்லை” என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறினர்.

### தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்

1) இ.வி.எம்., விவிபாட் தொழில்நுட்பம், வழிமுறைகள் குறித்து விரிவான விசாரணை மற்றும் ஆலோசனை நடத்தினோம்.

2 இ.வி.எம். மற்றும் விவிபாட் இயந்திரங்களின் நம்பகத் தன்மையை பல்வேறு கட்டங்களில் உறுதி செய்தோம்.

3) தேர்தல் நடைமுறையை சந்தேகிப்பது தேவையற்ற குழப்பங்களுக்கு வழிவகுக்கும்.

4) தேர்தல் முடிவுகளை அறிவித்த பின் 45 நாட்களுக்கு இயந்திரங்களை சீல் செய்து வைத்திருக்க வேண்டும்.

5) முடிவுகளை அறிவித்த பின் வாக்குபதிவில் குளறுபடி என்றுக் கூறி வேட்பாளர்கள் யாராவது இயந்திரத்தை சரி பார்க்க விரும்பினால் அவர்களிடம் தேர்தல் ஆணையம் கட்டணம் வாங்கிக்கொண்டு சோதனை செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரம் தவறாக செயல்பட்டது கண்டறியப்பட்டால் கட்டணத்தை திருப்பி தர வேண்டும்.

6) தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர் விரும்பினால் இ.வி.எம்.ல் உள்ள மைக்ரோ கண்ட்ரோலாரை ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும்.

7) ஏற்கனவே நடைமுறையில் உள்ள 5 சதவீத ஒப்புகைச் சீட்டு சரிபார்க்கும் முறையை தேர்தல் ஆணையம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

8) இ.வி.எம்.ல் ஒவ்வொரு கட்சிக்கும் அதன் சின்னத்துடன் பார் கோடு இணைப்பது குறித்து தேர்தல் ஆணையம் ஆய்வு செய்ய வேண்டும்.

### 2ம் கட்ட பாராளுமன்ற தேர்தல்:

# 13 மாநிலங்களில் அமைதியாக நடந்து முடிந்தது ஓட்டுப்பதிவு

புதுடெல்லி, ஏப். 27-

**13** மாநிலங்களில், **88** தொகுதிகளில் நேற்று காலை முதல் பாராளுமன்ற **2**ம் கட்ட வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்ற நிலையில், பெரும்பாலும் எந்தவித அசம்பாவிதம் ஏதுமின்றி அமைதியாக தேர்தல் நடந்து முடிந்தது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. 543 தொகுதிகளுக்கு மொத்தம் 7 கட்டங்களாக வாக்குப்பதிவு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கடந்த 19-ம் தேதி தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த, 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 70 சதவிகிதத்திற்கும் குறைவான வாக்குகளே பதிவாகின.

நேற்று (ஏப். 26) அசாம், பீகார், சத்தீஸ்கர், கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம் மகாராஷ்டிரா, மணிப்பூர், ராஜஸ்தான், திரிபுரா, உத்தரபிரதேசம், மேற்குவங்கம் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகிய 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 88 தொகுதிகளில் இரண்டாம் கட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெற்றது. அனைத்து பகுதிகளிலும் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. அதேநேரம் உள்ளூர் சூழலை சார்ந்து வாக்குப்பதிவு முடிவடையும் நேரம் மாறுபடுகிறது.

கேரளாவில் 20 பாராளுமன்ற தொகுதிகளுக்கும் நேற்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலை முன்னிட்டு வயநாடு, பாலக்காடு, மலப்புரம் ஆகிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அதேபோல், கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 மக்களவைத் தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. நேற்று 14 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. பெங்களூர் வடக்கு, பெங்களூர் தெற்கு, மத்திய பெங்களூரு, சிக்கபள்ளாபூர், கோலார், சித்ரதுர்கா, தும்கூர், மாண்டியா, மைசூர், சாம்ராஜ்நகா, பெங்களூரு ரூரல், ஹாசன், தட்சிண கன்னடா, உடுப்பி-சிக்கபள்ளாபூர் ஆகிய 14 தொகுதிகளுக்கு நேற்று வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு துவங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஜம்மு-காஷ்மீரில் 5 பாராளுமன்ற தொகுதிகளே உள்ளன. இந்த பாராளுமன்ற தேர்தலில் அந்த 5 தொகுதிகளுக்கும் 5 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அந்த வகையில், நேற்று ஜம்மு தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதேபோல் அசாம், பீகார், சத்தீஸ்கர், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, மணிப்பூர், ராஜஸ்தான், திரிபுரா, உத்தர பிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களிலும் வாக்குப்பதிவில் மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்கள் ஜனநாயக கடமையை ஆற்றினர். பெரும்பாலும் நேற்று நடைபெற்ற 2-ம் கட்ட தேர்தலில் எந்த வித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியாக நடந்தது.

# வட தமிழ்நாடு உள் மாவட்டங்களில் 30-ம் தேதி வரை வெப்பஅலை வீசும்

சென்னை,ஏப். 27-

வரும் **30-ம்** தேதி வரை **4** நாட்களுக்கு வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழக பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுகிறது. வரும் 29-ம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வரும் 30-ம் தேதி மற்றும் மே 01-ம் தேதியன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

### சென்னை வானிலை மையம் தகவல்

வரும் 02-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக் கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

(கடைசி பக்கம் பார்க்க)

# வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

### தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு ஆலோசனை

சென்னை, ஏப். 27-

தமிழகத்தில் வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகு ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் கடந்த 19-ம் தேதி நடந்து முடிந்தது. வாக்குப்பதிவு நிறைவு பெற்ற நிலையில், 39 மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்குகள் அடங்கிய வாக்கு எண்ணிக்கை இயந்திரங்கள் அனைத்தும் 39 வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மக்களவைத் தொகுதிக்கும் ஒரு வாக்கு எண்ணும் மையம் என்ற அடிப்படையில் 39 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தமிழக தேர்தல் அதிகாரி சதயபிரத சாகு நேற்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். இதில் வாக்கு எண்ணும் மையங்களில் சி.சி.டி.வி. கேமராக்கள், மூன்று அடுக்கு பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள காவல்துறை தொடர்பாக விரிவான ஆலோசனை நடைபெற்றது. மேலும், பாதுகாப்பு ஏற்பாடுகளை விரிவுப்படுத்துவது தொடர்பாக பல்வேறு வலியுறுத்தல்களையும் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வழங்கினார்.

## மார்க்கெட் விலை நிலவரம்



BSE -609.28 பாயின்ட் 73730.16

NSE -150.40 பாயின்ட் 22419.25



**தங்கம்** 1 சவரன் ₹54,040 1 கிராம் ₹6,755



**வெள்ளி** 1 கிலோ ₹88,000 1 கிராம் ₹88.00

**டாலர்** ₹83.34

**பெட்ரோல்** ₹101.57 **டீசல்** ₹93.18



### கைது செய்ய முயன்ற போது தாக்குதல்:

# அமெரிக்காவில் இந்தியரை சுட்டுக்கொன்ற போலீஸ்

**நியூயார்க், ஏப். 27-**

கைது செய்ய முயன்ற போது நடந்த தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து இந்திய வம்சாவளியை சேர்ந்தவரை அமெரிக்க போலீசார் சுட்டுக் கொன்றனர்.

அமெரிக்காவின் சான் அன்டோனியோ நகரின் சேவியட் ஹைட்ஸ் பகுதியில் வசித்து வந்தவர் சச்சின் சாஹூ (42). இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், கடந்த 21-ம் தேதி தன்னுடன் தங்கியிருந்த ஒரு பெண்ணுடன் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து அவரை தாக்கியுள்ளார்.

அவர் மீது தனது காரை ஏற்றியுள்ளார். இதில் அந்த பெண் பலத்த காயமடைந்துள்ளார். இதுபற்றி தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அந்த பெண்ணை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மிகவும் ஆபத்தான நிலையில் இருந்த அந்த பெண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பல்வேறு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அவரது நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது.



இந்த தாக்குதல் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து சச்சின் சாஹூவை தேடி வந்தனர். இதற்கிடையே தப்பிச் சென்ற சச்சின் சாஹூ, சில மணி நேரம் கழித்து மீண்டும் வீட்டிற்கு வந்துள்ளார். இது பற்றி அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் காவல்துறைக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து போலீசார் அந்த வீட்டை சுற்றி வளைத்து சச்சின் சாஹூவை கைது செய்ய முயன்றனர். அப்போது, நடந்த களேபரத்தில் அவரை போலீசார் சுட்டுக்கொன்றனர். இது பற்றி சான்அன்டோனியோ காவல் துறை கூறியிருப்பதாவது:-

தாக்குதல் வழக்கில் தொடர்புடைய சச்சின் சாஹூவை கைது செய்வதற்காக வீட்டுக்குச் சென்ற போலீஸ் அதிகாரிகள், அவரை தொடர்பு கொண்டு பேச முயன்றனர். அப்போது இரண்டு போலீஸ் அதிகாரிகள் மீது சாஹூ தனது காரை மோதி உள்ளார்.

அப்போது, மற்றொரு அதிகாரி தனது துப்பாக்கியால் சாஹூவை நோக்கி சுட்டார். இதில், சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார். குற்றவாளி காரை ஏற்றியதில் இரண்டு அதிகாரிகளும் காயமடைந்தனர்.

ஒரு அதிகாரி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். மற்றொரு அதிகாரிக்கு சம்பவ இடத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த சம்பவத்தின் போது வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு காவல் துறை தெரிவித்துள்ளது. சாஹூ ஒருவித மனநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவரது முன்னாள் மனைவி லியா கோல்ட்ஸ்டைன் தெரிவித்ததாக உள்ளூர் ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது. இந்தியாவின் உத்தரபிரதேசத்தை பூர்வீமாக கொண்ட சச்சின் சாஹூ, அமெரிக்காவில் குடியுரிமை பெற்றிருக்கலாம் என தெரிகிறது.

# பதவி விலகினார் ஹைதி பிரதமர் ஹென்றி

**மெக்சிகோ சிட்டி, ஏப். 27-**

தனது பதவியை நேற்று முன்தினம் ஹைதி பிரதமர் ஏரியல் ஹென்றி ராஜினாமா செய்தார். இவருக்கு பதிலாக இடைக்கால பிரதமராக பொருளாதாரம் மற்றும் நிதி அமைச்சர் மைக்கெல் பேட்ரிக் போயிஸ்வர்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கரீபிய நாடான ஹைதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆயுதக் குழுவினரின் வன்முறை தாக்குதல்களால் பல ஆண்டுகளாக மக்கள் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். 2021-ல் ஜனாதிபதி ஜோவனல் மோயிஸ் படுகொலை செய்யப்பட்ட பின் வன்முறை மேலும் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை பிப்ரவரி 7-ம் தேதிக்குள் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அரசாங்கம் தேர்தலை நடத்த தவறியதால் சமூக பதற்றம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து பிரதமர் ஏரியல் ஹென்றி பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த பிப்ரவரி மாத இறுதியில் இருந்து தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பொது இடங்கள் மீது ஆயுதக்குழுக்கள் தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

இந்த தொடர் வன்முறை மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்த பிரதமர் ஏரியல் ஹென்றி, நாட்டை வழிநடத்த இடைக்கால கவுன்சில் உருவாக்கப்பட்டவுடன் ராஜினாமா செய்வதாக கடந்த மாதம் அறிவித்தார்.

இந்நிலையில், ஏரியல் ஹென்றி தனது பிரதமர் பதவியை நேற்று முன்தினம் ராஜினாமா செய்தார். இவருக்கு பதிலாக இடைக்கால பிரதமராக பொருளாதாரம் மற்றும் நிதி அமைச்சர் மைக்கெல் பேட்ரிக் போயிஸ்வர்ட் நியமிக்கப்பட்டுள்ளார் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும் நாட்டை வழிநடத்த இடைக்கால கவுன்சில் நேற்று முன்தினம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஹென்றி நேற்று முன்தினம் ஒரு கடிதத்தை தனது சமூக ஊடகங்களில் வெளியிட்டார். அதில், அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், ஒத்துழைப்பாளர்களுக்கும், பொது நிர்வாகம், பாதுகாப்புப் படையினர் மற்றும் எனது ஆணையின் போது என்னுடன் இருந்த அனைவருக்கும் நன்றி. என்னுடன் இந்த சவால்களை எதிர்கொள்ள தைரியமாக இருந்த அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன் என்று தெரிவித்திருந்தார்.

### பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தல்:

# சிறப்பு டூடுல் வெளியீடு

**புது டெல்லி, ஏப். 27-**

பாராமன்ற தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றதை முன்னிட்டு டூடுலை வெளியிட்டு கூகுள் நிறுவனம் சிறப்பித்துள்ளது.

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 88 தொகுதிகளுக்கு நேற்று 2-ம் கட்டமாக தேர்தல் நடைபெற்றது.

இதற்கிடையே கூகுள் நிறுவனம் முக்கிய தினங்களுக்கு, இணையதள பக்கத்தின் முகப்பில் டூடுலை வெளியிட்டுச் சிறப்பிப்பது வழக்கம். இந்த நிலையில் பாராளுமன்ற தேர்லின் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெறுவதை முன்னிட்டு டூடுலை வெளியிட்டு கூகுள் நிறுவனம் சிறப்பித்துள்ளது.

அதன்படி, கூகுள் லோகோவுக்கு மத்தியில், வாக்காளித்தற்கு அடையாளமாக மை பூசப்பட்ட இடது ஆட்காட்டி விரல் இடம்பெற்றுள்ள டூடுல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த டூடுலை கிளிக் செய்யும் போது, இந்தியாவில் நடைபெற்று வரும் 18-வது பாராளுமன்ற தேர்தலின் சமீபத்திய புதுப்பிப்புகள், தேடல் முடிவுகளாக கிடைக்கின்றன.

### ஈரான் ராணுவத்துடன் ஒப்பந்தம்:

# 3 இந்திய நிறுவனங்களுக்கு தடை விதித்தது அமெரிக்கா

**வாஷிங்டன், ஏப். 27-**

ஈரான் ராணுவத்துடன் வர்த்தகம் செய்ததாக சொல்லி இந்தியாவை சேர்ந்த, 3 நிறுவனங்கள் உட்பட 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள காசாவில் ஹமாஸ் மீது இஸ்ரேல் போரை நடத்தி வருகிறது. அதேநேரம், இஸ்ரேல் - ஈரான் இடையே போர் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஈரானின் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து எச்சரித்து வந்தது. ஈரான் ராணுவத்துடன் வர்த்தகம் செய்ததாகச் சொல்லி 10க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இதில் மூன்று இந்திய நிறுவனங்களும் அடக்கம்.

ஈரான் ராணுவத்துடன் வர்த்தகம் செய்ததாகச் சொல்லி சில தனிநபர்கள் மற்றும் கப்பல்கள் மீதும் கூட அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. அமெரிக்காவின் கருவூலத் துறை (டிபார்ட்மெண்ட் ஆப் டிரசரி) இது குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. போருக்கு ஈரான் நாட்டின் யுஏவிக்கள் எனப்படும் ஆளில்லா விமானங்களை ரகசியமாக விற்பனை செய்வதற்கும், நிதியுதவி செய்வதற்கும் இந்த நிறுவனங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரான் நாட்டை சேர்ந்த சஹாரா தண்டர் நிறுவனம், அந்நாட்டு ராணுவத்துக்கு ஆளில்லா விமானங்களை உலக நாடுகளுக்கு விற்பனை செய்து வருகிறது. இந்த சஹாரா தண்டர் நிறுவனத்திற்கு உதவியாக இருந்ததாக ஜென் ஷிப்பிங், போர்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் சீ ஆர்ட் ஷிப் மேனேஜ்மென்ட் ஆகிய இந்திய நிறுவனங்களுக்கு அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

# இந்தியாவுடன் மேலும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த விருப்பம்

### இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கே

**கொழும்பு, ஏப். 27-**

இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கை விரும்புகிறது என்று அதிபர் ரணில் விக்கிரமசிங்கே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 2022-ம் ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனை சமாளிக்க இந்தியா இலங்கைக்கு கடனுதவிகளை வழங்கியதுடன், இலங்கையில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்யும் எனவும் உறுதியளித்தது.

அந்த வகையில் இந்தியாவின் பிரபல ஐடிசி குழுமம் இலங்கை தலைநகர் கொழும்புவில் பல ஆயிரம் கோடி செலவில் பிரமாண்டமான சொகுசு ஓட்டலை அமைத்துள்ளது. இந்த ஓட்டலை இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கே நேற்று முன்தினம் திறந்து வைத்தார். அதன் பின்னர் நடைபெற்ற விழாவில் ரணில் விக்ரமசிங்கே பேசியதாவது:-

இந்தியா இப்போது வளர்ந்து வரும் பொருளாதார ஜாம்பவான்களில் ஒன்றாக உள்ளது. இதன் மூலம் இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கை விரும்புகிறது. குறிப்பாக சுற்றுலாத் துறையை முன்னிலைப்படுத்தி இந்தியாவுடன் அதிக பொருளாதார ஒத்துழைப்பை விரைவுபடுத்த விரும்புகிறோம்.

அதிக ஒத்துழைப்பால் இரு நாடுகளும் ஆதாயம் அடையும். இந்த ஓட்டல் இலங்கைக்கு குறிப்பாக இந்தியாவில் இருந்து சுற்றுலாவை அதிகரிக்க உதவும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. நமது பொருளாதாரத்தை எப்படி ஒருங்கிணைத்து நாம் நெருங்கி வருகிறோம் என்பது குறித்து கடந்த ஆண்டு நானும், பிரதமர் மோடியும் கையெழுத்திட்ட தொலைநோக்கு அறிக்கையின் ஒரு பகுதியாக இவை உள்ளன.

பல வருடங்களாக இலங்கை, விடுமுறையை கழிப்பதற்கு ஏற்ற இடமாக இருந்து வருகிறது என்பதில் எனக்கு சந்தேகமில்லை. எதிர்காலத்தில் பெங்களூரு, சென்னை அல்லது ஐதராபாத்தில் உள்ள ஒருவர் இந்தியாவின் வடபகுதிக்கு செல்வதை விட விமானத்தில் ஏறி இங்கு (இலங்கை) வருவது எளிதாக இருக்கும்.

இவ்வாறு ரணில் விக்ரமசிங்கே பேசினார்.

### உங்கள் ஓட்டு உங்கள் குரல்:

# பிரதமர் மோடி அழைப்பு

**புதுடில்லி, ஏப். 27-**

13 மாநிலங்களில் நேற்று 2ம் கட்ட ஓட்டுப்பதிவு நடைபெற்ற நிலையில் பிரதமர் மோடி, மக்கள் அனைவரும் தவறாமல் ஓட்டளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது: அனைவரும் பெருவாரியான ஓட்டுப்பதிவை செய்ய வேண்டும்.

குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் பெருவாரியாக இந்த ஜனநாயக திருவிழாவில் பங்கேற்க வேண்டும். உங்கள் ஓட்டு உங்கள் குரலாக ஒலிக்கும். தவறாமல் ஓட்டளியுங்கள். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## 27-04-2024




**மேஷம்:-** நேர்மையாக நடக்க வேண்டிய நாள். கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் செயலால் உறவுகள் பகையாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**ரிஷபம்:-** ஆரோக்கியம் மேம்படும். தன லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் இலாபமும், மணவாழ்க்கை மகிழ்ச்சியும் ஏற்படும். பெரிய மனிதன் என்ற பெயரும் ஏற்படும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**மிதுனம்:-** எல்லா நலன்களும் உண்டாகும். தனவரவு கூடும். எதிரிகள் மறைவர். பெயரும், புகழும் உண்டாகும். புதுப் பெண்ணின் சிநேகமும், தனக்கென ஒரு தனி வீடும் ஏற்படும்.

**கடகம்:-** மனைவி, குழந்தைகள் மருத்துவச் செலவு ஏற்படலாம். பயணம் மற்றும் கல்வியில் தடைகள் ஏற்படலாம். வெற்றிக்கு வழி இல்லாத வகையில் ஏமாற்றங்களும் ஏற்படும்.

**சிம்மம்:-** அன்னையை அனுசரித்துச் செல்வது நல்லது. திறமை குறைவால் பணியிடத்தில் பயந்த நிலையில் இருப்பார்கள். காரியத் தடைகள் ஏற்படும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கன்னி:-** இன்று, வெற்றி மேல் வெற்றி, அதிக தனலாபம், புதிய நண்பர்கள், எதிர்பாலர் பால் ஈர்ப்பு மற்றும் இன்பமும் ஏற்றங்களும் ஏற்படும். மனத்தெம்பும் மகிழ்ச்சியும் நிலவும்.

**துலாம்:-** இன்று, எல்லாவற்றிலும், எல்லோரையும் சந்தேகப்படும் குணம் ஏற்படும். மனக் கவலை மற்றும் சந்தோஷ மற்ற வாழ்க்கை அமையும். பயந்த நிலையும் ஏற்படும்.

**விருச்சிகம்:-** இராஜ யோகம் தரும். நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் மற்றும் உறவுகளை சந்திப்பதால் ஏற்படும் மனமகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். இனிய பயணங்கள் இன்பம் தரும்.

**தனுசு:-** அதிக பணியின் காரணமாக நேரத்துக்குக்கு உணவருந்த முடியாது. கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும். குறிக்கோளற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:-** இன்று, பலவகைகளிலும் பண வருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். நண்பர்கள் சந்திப்பு நலம் தரும்.

**கும்பம்:-** இன்று, மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைத்து, அந்தஸ்தும் உயரும்.. அன்பளிப்புக்கள் பெறுவீர்கள்.

**மீனம்:-** சுகம் சந்தோஷம் கூடும். தெய்வீக ஈடுபாட்டால் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அரிய சாதனைகள் புரிந்து புகழடைவீர்கள். புதிய நகைகள் மற்றும் செல்வம் சேரும். வெளிநாடு செல்ல சாதகமான காலம்.

# போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களில் அரபு நாடுகளை போல தண்டனை வழங்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேட்டி

**மதுரை, ஏப். 27-**

போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களில் அரபு நாடுகளை போல தண்டனை வழங்க வேண்டும் என்று மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை பனகல் சாலையில் உள்ள மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகம் முன்பு நீர்,மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், டாக்டர் சரவணன், கணேஷ்பிரபு, வி.பி.ஆர்.செல்வகுமார், சண்முகவள்ளி, எம்.எஸ்.கே.மல்லன், எஸ்.டி.ஜெயபாலன், சுகந்தி அசோக், கே.ஜெயவேல், ஏ.பார்த்திபன், ஜெ.மாணிக்கம், வக்கீல் தமிழ்செல்வம், எம்.ஜி.ராமச்சந்திரன், சக்தி விநாயகர் பாண்டின், ஆர்.பாஸ்கரன், வக்கீல் அசோகன், எம்.எஸ்.செந்தில்குமார், கே.கலைசெல்வம், ஜோசப்தனிஸ்லாஸ், விளாங்குடி சித்தன், புதூர் சந்திரன், நூர்முகமது, மார்க்கெட் மார்நாடு, ராதா, கார்னர் பாஸ்கர், நாகேந்திரன், பூக்கடை ஐயப்பன், முத்துமுருகன், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

52ஆண்டுகளாக மக்களுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் உழைக்கும் கட்சி அ.தி.மு.க. வாக்காளர்கள் பலரின் பெயர் பட்டியலில் இருந்து உண்மையிலேயே விடுபட்டுள்ளது. இதை தேர்தல் ஆணையத்தின் மெத்தனப்போக்கு என்று சொல்வதா என்ன சொல்வது எனத்தெரியவில்லை.மதுரையில் தான் இப்படி இருக்கிறது என்று பார்த்தால் எல்லா மாவட்டங்களிலும் அப்படித்தான் உள்ளது. ஒவ்வொரு அரசியல் இயக்கங்களும் தேர்தல் காலத்தில் தங்கள் கட்சியினர் மூலம் பூத் சிலிப் வழங்க தேர்தல் ஆணையம் தடை செய்தது. தொடர்ந்து அரசு அலுவலர்கள் பணியாளர்களை கொண்டு இப்பணியை செய்தார்கள். அப்போது பூத் சிலிப்பை அரசு ஊழியர்களாக இருந்தவர்கள் கொடுத்தார்கள்.



இப்போது திமுக ஆட்சியில் ஒப்பந்த பணியாளர்கள் அதிகம் இருந்ததால் பூத் சிலிப் வழங்கும் பணியில் அதிகம் கவனம் செலுத்தவில்லை.

தேர்தல் ஆணையம் கட்சியினர் பூத் சிலிப் வழங்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.அதிபுத்திசாலி ஐபிஎஸ் படித்தவர் பூத் சிலிப் குறித்தும், வாக்காளர் பட்டியல் குளறுபடி குறித்து தற்போது பேசுகிறார். ஏன் முன்னரே பேசவில்லை.

பாஜக வாக்காளர்கள் தூக்கப்பட்டு விட்டனர் என சொன்னால் அதை ஏன் முன்பே ஆணையத்திடம் அண்ணாமலை கூறவில்லை. தேர்தலில் தனக்கு சரியான வாக்குப்பதிவு இல்லை. தன்னை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லை என்பதால் இது போன்று அண்ணாமலை பேசுகிறார்.

இதையெல்லாம் ஆணையத்திடம் மனுவாக ஏற்கனவே கொடுத்து இருக்கனும். ஒருவர் போனில் பேசியதை டேப் செய்து வெளியிடக்கூடிய திறமை படைத்த அண்ணாமலை. கட்சியினர் ஊழல் பட்டியலை வெளியிடும் அண்ணாமலை வாக்காளர் பட்டியலில் இருந்து பாஜக வாக்காளர்கள் விட்டுப்போயுள்ளனர் என முன்பே சொல்லியிருக்க வேண்டாமா? ஆனால் தற்போது கேரளாவுக்கும் கர்நாடகத்திற்கும் அண்ணாமலை போகிறார்.தமிழகத்திற்கு யார் நல்லது செஞ்சாலும் வரவேற்போம். அது ராகுலா இருந்தாலும் சரி.மோடியா இருந்தாலும் சரி. ஆனால் தமிழகத்தில் பாதகமானதை செய்தால் நிச்சயம் எதிர்ப்போம். அதை பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தெளிவாக சொல்லி உள்ளார்.

திமுக எம்.பிக்களை போல அதிமுக எம்பிக்கள் இருக்க மாட்டார்கள்.இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு. ஒரு மதத்தை குறி வைத்து பேசுவது உயர்ந்த பதவியில் உள்ள பிரதமர் மோடி ஜி பேசுவது சரியல்ல.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.தமிழகத்தில் இந்தியாவில் தலைவிரித்தாடும் போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு மத்திய, மாநில அரசுகளுக்கு உள்ளது. நாளைய நாட்டின் நம்பிக்கை நட்சத்திரங்கள்,விடிவெள்ளிகள் போதைப்பொருளை பயன்படுத்துவது அதிகரித்துள்ளது நினைத்தால் மனதை வேதனையடையச் செய்கிறது. இப்படி போதை பொருள் விற்பவர்களை வெறும் வழக்கு, குண்டாஸ் போடுவது மட்டுமல்லாமல் இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். புதிய சட்டங்களை கொண்டு வர வேண்டும்.

போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களில் அரபு நாடுகளை போல தண்டனை வழங்க வேண்டும். ஆட்சிக்கு வரும் முன்பு கனிமொழி கூறியது போல தமிழகத்தில் ஒரு சொட்டு மது இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### கல்லூரி மாணவிகளை தவறாக நடத்த முயற்சி:

# நிர்மலா தேவி வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

**சென்னை, ஏப். 27-**

கல்லூரி மாணவிகளை தவறாக நடத்த முயன்றதாக தொடரப்பட்ட வழக்கில் அருப்புக்கோட்டை பேராசிரியர் நிர்மலாதேவி வழக்கு தொடர்பாக நேற்று தீர்ப்பு வழங்கப்பட இருந்த நிலையில், நிர்மலா தேவி ஆஜராகததால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை தேவாங்கர் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியை நிர்மலாதேவி, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும், உயர் கல்வித்துறையிலும் செல்வாக்குடன் இருந்தவர். இவர், மீது பெற்றோர்கள் மூலம் கல்லூரி நிர்வாகத்தில் புகார்செய்ய, அதை அலட்சியம் செய்தது நிர்வாகம்.

அந்த நேரம், அவர் மாணவிகளிடம் பேசிய போன் உரையாடல், சமூக ஊடகங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் மறைக்கப்படவிருந்த இந்தச் சம்பவம் அருப்புக்கோட்டை தன்னார்வ அமைப்பு, எஸ். எஃப்.ஐ., ஜனநாயக வாலிபர் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் போன்ற பல்வேறு அமைப்புகளின் போராட்டம், நீதிமன்ற வழக்குக்குப் பிறகு போலீஸ் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

இந்த விவகாரத்தில், சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டது. 2018 ஏப்ரலில் நிர்மலா தேவி கைது செய்யப்பட்டார். இவருடன் சேர்ந்து இந்தக் குற்றத்தில் ஈடுபட்டதாக மதுரை காமராசர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முருகன், ஆய்வு மாணவர் கருப்பசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டார்கள்.

இந்த வழக்கில் இன்னும் பலர்மீது குற்றச்சாட்டுகளும், பல்வேறு சந்தேகங்களும் எழுந்த நிலையில், கடைசியில் நிர்மலாதேவி, முருகன், கருப்பசாமி ஆகியோர் மட்டும்தான் குற்றவாளிகள் என இறுதிசெய்து குற்றப்பத்திரிகையை சிபிசிஐடி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. நீண்ட நாட்கள் சிறையில் இருந்த நிர்மலா தேவி, முருகன், கருப்பசாமி ஆகியோருக்கு உயர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. ‘தாங்கள் அப்பாவிகள்’ பலிகடாவாக்கப்பட்டிருக்கிறோம்’ என்று முருகனும் கருப்பசாமியும் ஊடகங்களில் தெரிவித்து வந்தார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட மகிளா விரைவு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்துவந்த நிலையில், கொரோனா ஊரடங்கால் விசாரணை தாமதமானது. நிர்மலா தேவிக்காக ஆஜரான வழக்கறிஞர்கள் மாறிவந்த நிலையில், தற்போது அரசே அவருக்கு வழக்கறிஞரை நியமித்திருக்கிறது. இவர்களுக்கு எதிராக, பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம், தொழில்நுட்பத்தைத் தவறாக பயன்படுத்திய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தப்பட்டதாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு தொடர்பான அனைத்து சாட்சிகளும் விசாரிக்கப்பட்ட நிலையில் நேற்று தீர்ப்பு அளிக்கப்பட இருந்தது.

ஆனால் விசாரணையில் போது முருகன் மற்றும் கருப்புசாமி மட்டுமே ஆஜரான நிலையில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழக்கை விசாரித்த ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட மகிளா விரைவு நீதிமன்ற நீதிபதி பகவதியம்மாள், பேராசிரியர் நிர்மலாதேவி ஆஜராகாத நிலையில், வழக்கை ஏப். 29-ம் தேதி ஒத்தி வைத்து உத்தரவிட்டுள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# மோடி மீண்டும் பிரதமராக வர வேண்டும் என பொதுமக்கள் விரும்புகின்றனர்

## வாக்களித்த பிறகு நிர்மலா சீதாராமன் பேட்டி

பெங்களூரு, ஏப். 27- மோடி மீண்டும் பிரதமராக வர வேண்டும் என பொதுமக்கள் விரும்புவதாக மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நாடு முழுவதும் 12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது. கர்நாடகாவில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் முதல்கட்டமாக நேற்று 14 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்த நிலையில் கர்நாடகா மாநிலம் பெங்களூரு பி.ஈ.எஸ். கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று வாக்களித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் நிர்மலா சீதாராமன் கூறியதாவது, அதிகப்படியான மக்கள் வெளியே வந்து வாக்களிக்க வேண்டும். மக்கள் நிலையான ஆட்சி அமைய விரும்புகிறார்கள். அவர்கள் சிறந்த கொள்கைகள், வளர்ச்சி, முன்னேற்றத்தை விரும்புகிறார்கள். அதனால்தான் பிரதமர் மோடி மீண்டும் பிரதமராக தொடர வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

1968 -க்கு முன்பாக காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மக்கள் தங்களது சொத்தில் இருந்து 18 முதல் 20 சதவீதம் வைப்புத் தொகையை வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. பல நேரங்களில் அந்த பணம் திருப்பி தரப்படாமல் போனது. அதற்கு சரியான விளக்கங்களும் தரப்படாமலும் இருந்தது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் மக்கள் சம்பாதித்ததில் 90 சதவீதத்தை வரியாக செலுத்தினார்கள். அதெல்லாம் தற்போதைய தலைமுறையினருக்கு தெரியாது. காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் அதே நிலைக்கு திரும்புவோம்.

பரம்பரை வரியானது நடுத்தர வகுப்பினரையும், பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களையும் நேரடியாக பாதிக்கிறது. பரம்பரை சொத்து வரி முறை இந்தியாவின் பத்தாண்டு கால வளர்ச்சியை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும். இந்தியாவை முன்னோக்கி கொண்டு செல்வது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது போன்ற எதையும் பேசாமல், பிரதமர் மோடியை காங்கிரஸ் தொடர்ந்து தனிப்பட்ட முறையில் தாக்கி பேசி வருகிறது. காங்கிரசிடம் நல்ல அஜெண்டா ஏதுவுமில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### தேர்தலில் போட்டியிட தடை கோரி

# பிரதமர் மோடிக்கு எதிரான மனு மீதான விசாரணையை ஒத்திவைத்தது கோர்ட்

புதுடெல்லி, ஏப். 27- பிரதமர் நரேந்திர மோடி தேர்தலில் போட்டியிடுவதற்கு 6 ஆண்டுகள் தடை விதிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை டெல்லி உயர்நீதிமன்றம் ஒத்தி வைத்தது.

பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும்போது, இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர்களை பயன்படுத்துவதாக கூறி தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்பட்டு இருந்தது. டெல்லி உயர்நீதிமன்றத்தில் இந்த மனுவானது கடந்த ஏப். 15ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

இதுகுறித்து, வழக்கறிஞர் ஆனந்த் எஸ்.ஜோண்டேல் தாக்கல் செய்த மனுவில், பிரதமர் மோடி உத்தரபிரதேச மாநிலத்தில் தேர்தல் பரப்புரையின்போது மத ரீதியாக பிரசாரம் செய்ததாகவும் இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கு எதிரானது என்பதால் பிரதமர் மோடியை 6 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதிக்க உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதி சச்சின் தத்தா முன்பு நேற்று (ஏப். 26) விசாரணைக்கு பட்டியலிடப்பட்டிருந்தது. ஆனால் நீதிபதி நேற்று விடுமுறையில் சென்றதால் வழக்கின் விசாரணையை ஏப்ரல் 29-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. எனவே, பிரதமர் மோடிக்கு எதிரான இந்த வழக்கு ஏப்ரல் 29-ம் தேதி விசாரிக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# சமரச அரசியலுக்காக காங்கிரஸ், திரிணமுல் காங்., எதையும் செய்யும்

## மேற்குவங்கத்தில் பிரதமர் மோடி குற்றச்சாட்டு



கொல்கத்தா, ஏப். 27- மேற்கு வங்கத்தில் சமரச அரசியலுக்காக காங்கிரசும், திரிணமுல் காங்கிரசும் எதையும் செய்யும். சமரச அரசியலுக்காக இரு கட்சிகளும் போட்டியிடுகின்றன '' என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் வடக்கு மால்டாவில் நடந்த பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது: ஒரு காலத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு மேற்கு வங்க மாநிலம் உந்து சக்தியாக விளங்கியது. சமூக சீர்திருத்தம், அறிவியல் முன்னேற்றம், ஆன்மிக முன்னேற்றம், நாட்டிற்காக தியாகம் ஆகியவற்றில் முன்னணியில் இருந்தது.

ஆனால் இடதுசாரி மற்றும் திரிணமுல் காங்கிரஸ் ஆட்சியில், மாநிலத்தின் மரியாதை மற்றும் மதிப்பு நாசப்படுத்தப்பட்டு விட்டது. மாநிலத்தின் வளர்ச்சியும் நின்றுவிட்டது.

திரிணமுல் காங்கிரஸ் ஆட்சியில் கோடிக்கணக்கான அளவுக்கு ஊழல் மட்டுமே நடக்கிறது. ஊழல் செய்யாமல் மாநிலத்தில் எதுவும் நடக்காது. விவசாயிகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

மாநிலத்தின் இளைஞர்களின் எதிர்காலத்தில் திரிணமுல் காங்கிரஸ் விளையாடி வருகிறது. 26 ஆயிரம் குடும்பங்கள் வேலை இழந்துள்ளன. கடன்சுமையுடன், வேலையை தக்க வைத்துக் கொள்வதற்காக திரிணமுல் காங்கிரசுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டி உள்ளது. விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதற்காக, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க முடிவு செய்தோம். அதிலும், திரிணமுல் காங்கிரஸ் லஞ்சம் கேட்கிறது.

இங்கு சண்டையிடுவதாக காங்கிரசும், திரிணமுல் காங்கிரசும் நடிக்கின்றன. ஆனால், உண்மையில் இரு கட்சிகளின் கொள்கையும் ஒன்றுதான். சமரச அரசியலுக்காக இரு கட்சிகளும் எதையும் செய்யும். சமரச அரசியலுக்காக இரு கட்சிகளும் போட்டியிடுகின்றன. நாட்டின் நலனுக்காக நாங்கள் எடுத்த முடிவுகளை நீக்க அவர்கள் விரும்புகின்றனர்.

ஏழை மக்களின் சொத்துகள் குறித்து விசாரிக்க போவதாக காங்கிரஸ் அறிவித்து உள்ளது. நகைகள் மற்றும் சொத்துகள் உள்ளிட்ட அனைத்து சொத்துகளையும் ஆய்வு செய்து அதனை தங்களது ஓட்டு வங்கிக்கு அளிக்க முடிவு செய்துள்ளது. இதனை திரிணமுல் காங்கிரஸ் எதிர்க்கவில்லை. மவுனமாக இருந்து ஆதரிக்கிறது. உங்கள் நிலங்களை பறித்து அதில் வங்கதேசத்தில் இருந்து வந்தவர்களை திரிணமுல் குடியமர்த்தி உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

### கோடை விடுமுறை முடிந்து

# புதுச்சேரியில் ஜூன் 6-ல் பள்ளிகள் மீண்டும் திறப்பு

புதுச்சேரி, ஏப் 27- கோடை விடுமுறை முடிந்து புதுச்சேரியில் ஜூன் 6-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அம்மாநில கல்வித்துறை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் படிக்கும் 1 முதல் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு கடந்த 12-ம் தேதி அன்று தேர்வு முடிந்து 13-ம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பள்ளிகள் திறப்பு குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் புதுச்சேரி சுகாதாரம் மற்றும் குடும்ப நலப் பணிகள் இயக்குநரால் வெளியிடப்பட்ட அறிவிப்பில், தீவிர வெப்பம், வெப்ப அலைக்கான பொது சுகாதார ஆலோசனையின் தொடர்ச்சியாக, அனைத்து அரசு பள்ளிகளுக்கும் கோடை விடுமுறை வரும் 29-ம் தேதி முதல் தொடங்கும். புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அரசு பள்ளிகளுக்கு வரும் 29-ம் தேதி முதல் கோடை விடுமுறை விடப்படுகிறது. இவ்வாறு புதுச்சேரி பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. இந்நிலையில் தனியார் மற்றும் சி.பி.எஸ்.இ. பள்ளிகள் ஜூன் 6-ம் தேதி திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளாவில் ஓட்டுப்பதிவின் போது மயங்கி விழுந்து 4 பேர் உயிரிழப்பு

திருவனந்தபுரம், ஏப். 27- கேரளாவில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவின்போது 4 பேர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளனர்.

பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்களது ஜனநாயக கடமையை ஆற்றினர்.

இந்த நிலையில், கேரளாவில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவின் போது 4 பேர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளனர்.

பாலக்காடு, கோழிக்கோடு, ஆலப்புழா, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

பாலக்காடு பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒட்டப்பாலம் அருகே உள்ள சுனங்காட்டை சேர்ந்த சந்திரன் (68) என்பவர் வாணி விலாசினி பள்ளி வாக்குச்சாவடியில் காலை 7.30 மணியளவில் வாக்களித்து விட்டு வெளியே வந்த போது திடீரென மயங்கி விழுந்தார்.

உடனே அருகில் நின்றவர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கோழிக்கோடு நகர வாக்குச்சாவடி எண் 16-ஐ சேர்ந்த இடது ஜனநாயக முன்னணியின் (எல்.டி.எப்) பூத் ஏஜெண்டான அனீஸ் அகமது (66) காலை 8 மணியளவில் வாக்குப்பதிவின் போது மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதனால் சில நிமிடங்களுக்கு தேர்தல் பணிகள் நிறுத்தப்பட்டது.

ஆலப்புழா தொகுதியின் காக்காழோம் சுசாந்த் பவனில் வசிக்கும் சோமராஜன் (70) என்ற முதியவர் ஆலப்புழாவில் உள்ள அம்பலப்புழாவில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் வாக்கு செலுத்த வரிசையில் நின்ற போது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

மலப்புரம் மாவட்டம் திருரைச் சேர்ந்த ஆசிரியர் சித்திக் (63) என்பவர் நிறைமருதூர் அருகே உள்ள வல்லிக்கஞ்சிரம் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்து விட்டு வீட்டிற்கு சென்ற சிறிது நேரத்தில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

# ஆம் ஆத்மி கட்சிக்காக தேர்தல் பிரசாரம் மேற்கொள்கிறார் கெஜ்ரிவால் மனைவி

## டெல்லி 'ரோடு ஷோ'வில் இன்று பங்கேற்பு

புது டெல்லி, ஏப். 27- டெல்லி, பஞ்சாப், குஜராத் மற்றும் அரியானா மாநிலங்களில் ஆம் ஆத்மியை ஆதரித்து கெஜ்ரிவாலின் மனைவி சுனிதா கெஜ்ரிவால் பிரச்சாரம் மேற்கொள்வார் என்று டெல்லி மாநில அமைச்சர் அதிஷி தெரிவித்துள்ளார். மேலும் டெல்லியில் இன்றும், நாளையும் சுனிதா கெஜ்ரிவால் ரோடு ஷோ நடத்தவுள்ளதாகவும் அதிஷி தெரிவித்துள்ளார்.

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், மதுபான கொள்கை தொடர்பான வழக்கில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மே 7-ம் தேதி வரை அவரது நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவரது மனைவி சுனிதா கெஜ்ரிவால் டெல்லி, பஞ்சாப், குஜராத் மற்றும் அரியானா மாநிலங்களில் ஆம் ஆத்மியை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வார் என அக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், டெல்லி மாநில அமைச்சருமான அதிஷி தெரிவித்துள்ளார்.

மேலும் இன்று கிழக்கு டெல்லி தொகுதியில் சுனிதா கெஜ்ரிவால் ரோடு ஷோ நடத்துகிறார் என்றும், நாளை மேற்கு டெல்லியில் அவர் ரோடு ஷோ நடத்துகிறார் என்றும் அதிஷி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி காங்கிரஸ் உடன் கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறது. மொத்தமுள்ள ஏழு தொகுதிகளில் கிழக்கு டெல்லி, மேற்கு டெல்லி, தெற்கு டெல்லி, நியூ டெல்லி ஆகிய இடங்களில் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடுகிறது.

காங்கிரஸ் கட்சி வடகிழக்கு டெல்லி, வடமேற்கு டெல்லி, சாந்தினி சவுக் ஆகிய இடங்களில் போட்டியிடுகிறது.

### பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தல்:

# பினராயி, நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட பிரபலங்கள் வாக்களிப்பு

புதுடெல்லி, ஏப். 27- பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தலை முன்னிட்டு பினராயி விஜயன், நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட பிரபலங்கள் வாக்களித்தனர்.

பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தலை ஒட்டி நாடு முழுவதும் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 88 தொகுதிகளில் நேற்று (ஏப்.26) காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது. தேர்தலில் வாக்களிக்க பிரதமர் மோடி, காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி உள்ளிட்டோர் அழைப்பு விடுத்துள்ள நிலையில் காலை தொடங்கி பிரபலங்கள் பலரும் வாக்களித்தனர். 2-ம் கட்டமாக கேரளா - 20 , கர்நாடகா- 14, ராஜஸ்தான் - 13, மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம் - தலா 8, மத்திய பிரதேசம் - 6,பிஹார், அசாம் - தலா 5, மேற்குவங்கம், சத்தீஸ்கர் - தலா 3, ஜம்மு-காஷ்மீர், திரிபுரா, மணிப்பூரில் தலா ஒரு தொகுதி என ஓட்டுமொத்தமாக 12 மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்தை சேர்ந்த 88 தொகுதிகளில் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது.

கேரளாவில் முதல்வர் பினராயி விஜயன் தனது வீட்டிலிருந்து நடந்தே வந்து வாக்களித்துச் சென்றார். கேரள எதிர்க்கட்சித் தலைவர் விடி சதீஷன் எர்ணாகுளத்தில் வாக்களித்தார். வாக்களித்துவிட்டு செய்தியாளர்களை சந்தித்த முதல்வர் பினராயி விஜயன், "கேரள மக்கள் பாஜகவுக்கு, காங்கிரஸுக்கும் எதுவும் செய்ய இல்லை. செய்யவும் செய்யாது. இப்போதுகூட மத்தியில் ஆளும் பாஜக அரசு கேரளாவுக்கு உரிய நிதி வழங்க மறுக்கிறது" என்றார்.

காங்கிரஸ் கட்சியின் ஆலப்புழா தொகுதி வேட்பாளர் கேசி வேணுகோபால் வாக்களித்துவிட்டு அளித்த பேட்டியில், "ஆலப்புழா மக்கள் என்னுடன் நிற்பார்கள் என நான் நம்புகிறேன். முதற்கட்டத் தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் மோடி பதற்றத்தில் உள்ளார். காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை மக்கள் மத்தியில் பெருமளவில் கொண்டு சேர்த்தமைக்காக பிரதமர் மோடிக்கு நான் நன்றி சொல்கிறேன். கேரளாவில் யுடிஎஃப் 20 தொகுதிகளைக் கைப்பற்றும். வயநாட்டு மக்களும் கேரள மக்களும் நாங்கள் ராகுலின் மக்கள் என்பதை நிரூபிப்பார்கள்" என்றார்.

திருச்சூரில் வாக்களித்த பாஜக வேட்பாளர் நடிகர் சுரேஷ் கோபி, "இந்தத் தேர்தல் மக்களின் இதயங்களைப் பிரதிபலிக்கும். தேசவளர்ச்சியில் கேரள மக்களின் பங்களிப்பு தெரியவரும். மக்கள் இதயங்கள் திருச்சூரில் மட்டுமல்ல கேரளாவின் அனைத்துத் தொகுதிகளிலும் மலரும்" என்று நம்பிக்கை தெரிவித்தார். கர்நாடகா மாநிலத்தில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது வாக்கை பதிவு செய்தார். இன்போசிஸ் நிறுவனத் தலைவர் நாராயண மூர்த்தி அவரது மனைவியும் ராஜ்யசபா எம்.பியுமான சுதா மூர்த்தியும் பெங்களூருவில் வாக்களித்தனர்.

# சென்னைக்கு ஜூன் முதல் மீண்டும் கிருஷ்ணா தண்ணீர் திறக்கப்படும்

## ஆந்திர அரசு தகவல்

ஊத்துக்கோட்டை, ஏப். 27- ஜூன் மாதம் முதல் மீண்டும் கிருஷ்ணா தண்ணீர் திறந்து விடுவதாக ஆந்திர அரசு தெரிவித்துள்ளது.

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக அரசு ஆந்திர அரசுடன் கடந்த 1983-ம் ஆண்டு கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தை வகுத்தது. அதன்படி நெல்லூர் அருகில் உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு வழங்க வேண்டும்.

அதாவது ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. தண்ணீரும் ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டி.எம்.சி. தண்ணீரும் தர வேண்டும். ஆனால் கடந்த ஆண்டு ஜூன் முதல் மே வரை இரண்டரை டி.எம்.சி.கிருஷ்ணா தண்ணீர்தான் பூண்டி ஏரிக்கு கிடைத்தது.

அதன் பிறகு சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ய தொடங்கியதால் சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் தண்ணீர் இருப்பு இருந்தது. இதனால் கிருஷ்ணா தண்ணீரை உடனே தருமாறு வலியுறுத்தவில்லை.

இந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழை வெள்ளம் ஏற்பட்டது. இதன் காரணமாக கிருஷ்ணா தண்ணீரை திறந்து விட வேண்டாம் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டது. அதனால் கிருஷ்ணா தண்ணீர் திறப்பதை ஆந்திர அரசு நிறுத்தியது.

இப்போது கோடை காலமாக இருப்பதால் இரு மாநிலத்திற்கும் குடிநீர் தேவைக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. இதன் காரணமாக கண்டலேறு அணையில் இருந்து பூண்டிக்கு கிருஷ்ணா தண்ணீரை திறந்து விடுமாறு தமிழக அரசு கோரிக்கை வைத்தது.

ஆனால் கண்டலேறு அணையில் இப்போது 6 டி.எம்.சி. தண்ணீர்தான் உள்ளது. (கொள்ளளவு 68 டி.எம்.சி.) இதனால் கிருஷ்ணா தண்ணீரை இப்போது திறந்து விட இயலாது என்று ஆந்திர அரசு கூறி உள்ளது.

4 மாதமாக அணை திறக்கப்படாத நிலையில் மழை பெய்யும் பட்சத்தில் ஜூன் மாதம் முதல் மீண்டும் கிருஷ்ணா தண்ணீரை திறந்து விடுவதாக ஆந்திர அரசு தெரிவித்துள்ளது. அதாவது ஜனவரி முதல் ஏப்ரல் வரை தர வேண்டிய 4 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விட ஏற்பாடு செய்வதாக ஆந்திர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையை சுற்றி உள்ள ஏரிகளில் இப்போது 6.980 டி.எம்.சி. (கொள்ளளவு 13.213 டி.எம்.சி.) தண்ணீர் இருப்பு உள்ளதாகவும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தின் மூலம் 200 மில்லியன் லிட்டர் குடிநீர் தினமும் கிடைத்து வருவதாலும் குடிநீரை கட்டுப்பாடின்றி வினியோகித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தவிர குன்றத்தூர் திருசூலம் பகுதிகளில் உள்ள கல் குவாரிகளிலும் தேவையான அளவு தண்ணீர் இருப்பதால் அதை வைத்து குடிநீர் தேவையை சமாளிக்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு தேர்வு மைய விவரம் வெளியீடு

புதுடெல்லி, ஏப். 27- நீட் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கும் மாணவர்களுக்கு தேர்வு மையம் எங்கு அமையவிருக்கிறது என்பதற்கான சிட்டி இன்டிமேஷன் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் எம்பிபிஎஸ், பிடிஎஸ், பிஎஸ்எம்எஸ், பிஏஎம்எஸ், பியுஎம்எஸ், ஹோமியோபதி உட்பட இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ படிப்புகளுக்கும் தேசிய அளவில் நீட் தேர்வு (தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு) நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் இந்த தேர்வை தேசிய தேர்வு முகமை நடத்துகிறது.

நீட் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில், கலந்தாய்வின்போது மருத்துவக் கல்லூரிகள் ஒதுக்கப்படும். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு மே 5-ம் தேதி நடைபெற உள்ளது. தேர்வு முடிவுகள் ஜூன் 14-ம் தேதி வெளியாக உள்ளது. இந்த தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு பிப்ரவரி மாதம் 9-ம் தேதி தொடங்கி, மார்ச் 16 ஆம் தேதியுடன் நிறைவு பெற்றது.

இந்த நிலையில், இந்த தேர்வுக்கு நாடு முழுவதும் 23 லட்சத்து 81,833 பேர் விண்ணப்பித்துள்ளதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. இதில் 10,18,593 பேர் ஆண்கள், 13,63,216 பெண்கள், 24 பேர் திருநங்கைகள். மேலும், தமிழ் நாட்டில் 1.55 லட்சம் பேர் விண்ணிப்பித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மாநிலங்களின் வரிசையில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 3,39,125 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்நிலையில், நீட் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கும் மாணவர்களுக்கு தேர்வு மையம் எங்கு அமையவிருக்கிறது என்பதற்கான சிட்டி இன்டிமேஷன் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அதிகாரப்பூர்வ இணையதளத்தில், நீட் தேர்வுக்கு விண்ணப்பித்திருக்கும் மாணவர்கள், நீட் விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளிட்டு, தங்களது தேர்வு மையம் எந்த நகரத்தில் அமையவிருக்கிறது என்பதை உறுதி செய்து கொள்ளலாம். விரைவில், நீட் தேர்வுக்கான நுழைவுச் சீட்டும் இணையதளத்தில் வெளியிடப்படவிருக்கிறது. அதனையும் மாணவர்கள் நகல் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வெயில், வரத்து குறைவு எதிரொலி: காய்கறி விலை கடுமையாக உயர்வு

சென்னை, ஏப். 27- கோடை வெயிலின் தாக்கத்தால் காய்கறிகளின் வரத்து குறைந்து விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

கோடைக்காலம் நெருங்கிய நிலையில், கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. மேலும் பல இடங்களில் வெயில் சதமடித்து வருகிறது. அதிகப்படியான வெப்பம் காரணமாக நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வருகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதால் காய்கறிகளின் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் காய்கறி, உணவுத் தேவைகளின் தட்டுப்பாடு அதிகமாகி விலை அதிகரிக்கிறது.

சென்னை கோயம்பேடு காய்கறி சந்தைக்கு தினமும் ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்கள், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் காய்கறிகள், பழங்கள் விற்பனைக்கு வருகின்றன. ஆனால் அனைத்து இடங்களிலும் வெயிலின் தாக்கத்தால் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் வரத்து தற்போது குறைந்துள்ளது. மேலும் கிடங்குகளில் சேமிக்கப்பட்டு வைத்திருக்கும் காய்கறிகளும் வெயிலால் வாடி வீணாகி விடுகின்றன.

இதனால் காய்கறிகளின் விலை அதிகமாக உயர்ந்துள்ளது. கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ. 30 வரை காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. இந்நிலையில் நேற்றைய விலை நிலவரப்படி, ஒரு கிலோ பீன்ஸ் ரூ.160-க்கும், எலுமிச்சை ரூ. 140-க்கும், பட்டாணி ரூ.100-க்கும், இஞ்சி ரூ.140-க்கும், பூண்டு ரூ.150-க்கும் விலை உயர்ந்து விற்பனையானது. அதேபோல, சின்ன வெங்காயம் கிலோ ரூ.50-க்கும், ஊட்டி கேரட் ரூ.50-க்கும், சேனைக்கிழங்கு ரூ. 68-க்கும், வெள்ளரிக்காய் ரூ.30-க்கும், பச்சை மிளகாய் ரூ.45-க்கும், குடை மிளகாய் ரூ.50-க்கும், வண்ண குடமிளகாய் ரூ. 90-க்கும் விலை உயர்ந்து விற்பனையானது.

# மனைவியின் சீதனத்தில் கணவருக்கு உரிமையில்லை: சுப்ரீம் கோர்ட் கருத்து


புதுடில்லி, ஏப். 27- 'மனைவிக்கு, அவரது வீட்டின் சார்பில் சீதனமாக தரப்படும் சொத்தில், கணவருக்கு எந்த உரிமையும் இல்லை' என, சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. கேரளாவை சேர்ந்த பெண் ஒருவர், 'கடந்த 2009ல் திருமணத்தின் போது பெற்றோரால் எனக்கு சீதனமாக வழங்கப்பட்ட 90 லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்க நகைகளை கணவர் எடுத்துக் கொண்டார். அதை திருப்பித் தர உத்தரவிட வேண்டும்' என சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, நீதிபதி தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியதாவது: மனைவி சீதனமாக எடுத்து வரும் சொத்து, கணவரின் சொத்தாக மாறாது. அதில் அவருக்கு எந்த உரிமையும் இல்லை. மாறாக, அவசர தேவைக்கு அந்த சொத்தை அவர் பயன்படுத்தியிருந்தால், அதை திருப்பித் தர வேண்டியது கணவரின் தார்மீக கடமை. இந்த வழக்கில், பெண்ணின் நகைகளை பயன்படுத்திய கணவர், அதற்கு ஈடாக 25 லட்சம் ரூபாயை மனைவிக்கு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



புதுக்கோட்டை மாவட்டம் சங்கம்விடுதி ஊராட்சி குடிநீர் தொட்டியில் மாட்டுச்சாணம் கலந்தது கண்டிக்கத்தக்கது. இந்த நிகழ்வின் பின்னணியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுத்தர தமிழக அரசும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ராமதாஸ்




பா.ஜ.க. தனது வழிகாட்டியான ஆர்.எஸ்.எஸ்.சின் நூற்றாண்டு வருடமான 2025-க்குள் எஸ்.சி, எஸ்.டி, ஓ.பி.சி. இடஒதுக்கீட்டை ரத்து செய்ய முயற்சிக்கிறது. இடஒதுக்கீட்டை ரத்து செய்ய பாராளுமன்ற தேர்தலில் 400 இடங்களை வெல்ல வேண்டும் என பா.ஜ.க. சொல்லி வருகின்றது. இந்த தேர்தல் எஸ்.சி., எஸ்.டி., பி.சி. இடஒதுக்கீடுகளுக்கான தேர்தல் ஆகும்.

- ரேவந்த் ரெட்டி



காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியானதில் இருந்து மக்கள் பா.ஜ.க.வின் பக்கம் திரும்புவது மேலும் அதிகரித்துள்ளது. காங்கிரஸ் கட்சி தனது பழைய சித்தாந்தமான 'சிறுபான்மையினரை சமாதானப்படுத்தும்' அரசியலை அதன் தேர்தல் அறிக்கையிலும் தொடர்ந்துள்ளது. அதனால்தான், இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

- அமித் ஷா



பிரதமர் மோடி நாட்டுக்கு ஒரு புதிய திசையை கொடுத்துள்ளார். அவரது 10 ஆண்டுகால ஆட்சி சுதந்திர இந்தியாவின் பொற்காலம். ஒவ்வொரு துறையிலும், இந்தியா புதிய சாதனையை படைத்து வருகிறது. இன்று, இந்தியா வேகமாக முன்னேறி வரும் பொருளாதாரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமாக அமையும்.

- யோகி ஆதித்யநாத்

# ரூ.2 லட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் விருதுநகர் கலெக்டரிடம் அறக்கட்டளையினர் வழங்கினர்



**விருதுநகர், ஏப். 27-**

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி சித்தனேந்தல் பால்ச்சாமி ராஜம்மாள் நினைவு அறக்கட்டளை (பிரைஸ் டிரஸ்ட்) சார்பில் ரூ.2 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெயசீலன் முன்னிலையில், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேனேஜிங் டிரஸ்டி சினேகலதா பொன்னையா வழங்கினார்.

அதன்படி, காரியாபட்டி சித்தனேந்தல் பால்ச்சாமி ராஜம்மாள் நினைவு அறக்கட்டளை (பிரைஸ் டிரஸ்ட்) சார்பில் முஷ்டகுறிச்சி, கோபாலபுரம், அழகாபுரி மற்றும் ஆவுடையாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் போது துணை இயக்குனர் யசோதாமணி, காரியாபட்டி எஸ்.பி.எம் டிரஸ்ட் நிறுவனர் எம்.அழகர்சாமி, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.





• தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நேற்று தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் நடைபெற்ற தீவிபத்து ஒத்திகை நிகழ்ச்சியை கலெக்டர் ஷஜீவனா பார்வையிட்டார்.

# திருமங்கலம் முக்தி நிலைய சத்ய யுக சிருஷ்டி கோவிலில் மஹா கும்பாபிஷேக பெருவிழா

## ஆயிரக் கணக்கானோர் பங்கேற்பு



**திருமங்கலம், ஏப். 27-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அருகேயுள்ள முக்தி நிலைய சத்ய யுக சிருஷ்டி கோவிலில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக பெருவிழாவில் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

திருமங்கலம் அருகே யுள்ள முக்தி நிலையத்தில் 108 சன்னதிகளுடன் 600க்கும் மேற்பட்ட தெய்வங்கள் அருள்பாலித்து வரும் சத்ய யுக சிருஷ்டி கோவிலில் ஸ்ரீ பத்மாவதி தாயார் சமேத திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி பெருமாள் விமானம்,ஸ்ரீ பத்மாவதி தாயார் விமானம்,ஸ்ரீ ஆண்டாள் விமானம் மற்றும் பரிவார மூலவர், உற்சவ மூர்த்திகளுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக மஹோத்ஸவ விழா சிறப்பாக நடைபெற்றது.

அதன்படி நேற்று காலை சுபயோக சுபதினத்தில் காலை 9.00மணிக்கு மேல் 10.15 மணிக்குள் மிதுன லக்னத்தில் உலக ஜீவன் முக்தி ஸ்தாபனம், முக்தி நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் பரிபூரண ஆசியுடனும்,

முக்தி நிலையம் தலைவி தெய்வத்தாய் ஸ்ரீ வசந்தசாய் அம்மா தலைமையிலும் சத்ய யுக சிருஷ்டி கோவில் ஸ்தாபகர் மற்றும் கௌரவ தலைமை அறங்காவலர் ஸ்ரீ கே.எஸ். வெங்கட்ராமன் சுவாமிகள்,ஸ்ரீமதி ஜோதிமணி வெங்கட்ராமன் மற்றும் வேத விற்பன்னர்கள், தவசீலர்கள், மடாதிபதிகள், துறவிகள் மற்றும் ஆன்றோர்கள் முன்னிலையில்

ஸ்ரீ பத்மாவதி தாயார் சமேத திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி பெருமாள் விமானம்,ஸ்ரீ பத்மாவதி தாயார் விமானம்,ஸ்ரீ ஆண்டாள் விமானம் மற்றும் பரிவார மூலவர், உற்சவ மூர்த்திகளுக்கு வேத மந்திரங்கள் முழங்கிட புனித நீர் ஊற்றி அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மங்களகரமாக நடைபெற்ற இந்த மஹா கும்பாபிஷேக வைபவத்தில் பக்த கோடிகள், மெய்யன்பர்கள் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்து பரம் பொருளின் பேரருளை பெற்றுச் சென்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் கோவிலின் சார்பில் பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது.

இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ வசந்தசாய் பவுண்டேஷன்ஸ் செய்திருந்தது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# நத்தத்தில் இராஜகாளியம்மன் கோவில் திருவிழா



**நத்தம், ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள இராஜகாளியம்மன் கோவில் திருவிழா நடந்தது. இதில் கடந்த 23-ம் தேதி சந்தனக் கருப்பு சுவாமி கோவிலில் இருந்து கன்னிமார் தீர்த்தம் அழைத்து வரப்பட்டு திருவிழா தொடங்கியது. அன்று இரவு அம்மன் குளத்தில் இருந்து கரகம் ஊர்வலமாக கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது. பின்னர் அம்மனுக்கு சிறப்பு அலங்காரமும், அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து திருவிளக்கு பூஜை, அரண்மனை பொங்கல் வைத்தல், மாவிளக்கு, முளைப்பாரி, கிடாய் வெட்டுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடந்தது. பின்னர் நேற்று முன்தினம் இரவு கரகம் அம்மன்குளம் செல்லும் நிகழ்ச்சி நடந்தது.

விழாவில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து அம்மனை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கடலாடி அருகே மகமாயி அம்மன் கோவில் வருடாபிஷேக விழா



**கடலாடி, ஏப்.27.**

கடலாடி அருகே உள்ள மகமாயி அம்மன் கோவிலில் முதலாம் ஆண்டு வருடாபிஷேக விழா நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டம் தேவர்குறிச்சி கிராமம் அருகே அருள்மிகு மகமாயி அம்மன் கோவில் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த அருள்மிகு மகமாயி அம்மன் கோவிலில் கடந்த ஆண்டு கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதனையொட்டி முதலாம் ஆண்டு வருடாபிஷேக விழாவும் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சுமங்கலி பூஜை மற்றும் குத்து விளக்கு பூஜையில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். ஏப்ரல் 25ந்தேதி காலை 7 மணியளவில் யாகசாலை பூஜையுடன் வருடபிஷேக விழா ஆரம்பிக்கப்பட்டன.

காலை 10 மணியளவில் அருள்மிகு மகமாயி அம்மனுக்கு பால் - சந்தனம் -மஞ்சள் பன்னீர் உள்ளிட்ட 21 வகை அபிஷேகம் செய்யப்பட்டன. அதனைதொடர்ந்து அருள்மிகு மகமாயி அம்மன் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இந்நிகழ்ச்சியில் சுற்று வட்டார கிராம மக்கள் பக்தியுடன் சாமி தரிசனம் செய்தனர். பொது அன்னதானம் பக்தர்களுக்கு வழங்கபட்டன.

# மேலூர் அருகே கோவில் விழாவையொட்டி இரட்டை மாட்டுவண்டி பந்தயம்



**மேலூர், ஏப். 27-**

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், வெள்ளலூர் நாடு கட்டக்காளைபட்டியில் உள்ள ஸ்ரீ முனியாண்டி சுவாமி கோவிலின் 13 ஆம் ஆண்டு அன்னதான விழாவை முன்னிட்டு மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம் கட்டக்காளைபட்டியில் நடைபெற்றது. போட்டி கட்டகாளைபட்டி முதல் ஒக்கூர் சாலை வரை முதலில் பெரியமாட்டில் 10 மாட்டு வண்டி ஜோடிகள் கலந்து கொண்டன.

முதல் பரிசு நகரம்பட்டி வாலுக்கு வேலி வைத்தியா, இரண்டாம் பரிசு சின்னமாங்குளம் அழகு, ஆர்.கே பிரதர்ஸ் இன் காட்டு தீ குரூப்ஸ் கட்டக்காளைபட்டி, மூன்றாம் பரிசு செமினிபட்டி ஆண்டிபாலா காளகண்மாய் வீரபாலா, நான்காம் பரிசு புலிமலைப்பட்டி நீதிதேவன், மட்டங்கிப்பட்டி காவியா, கட்டக்காளைபட்டி ரிஷிபாலன் ஆகியோரது மாட்டு வண்டிகள் வெற்றி பெற்றன.

சிறிய மாட்டு வண்டி போட்டியில் 20 மாட்டு வண்டி ஜோடிகள் கலந்து கொண்டன. முதல் பரிசு அயிலாங்குடி மலைச்சாமி, கண்டனிபட்டி ராஜகண்ணப்பன், இரண்டாம் பரிசு அய்யம்பாளையம் கதிர் நினைவாக மலைச்சாமி, மூன்றாம் பரிசு மேலூர் பல்லவராயன்பட்டி வர்ஷா இளமாறன், நான்காம் பரிசு ஆர்.கே. பிரதர்ஸ் இன் காட்டு தீ கட்டக்காளைபட்டி, பாகனேரி பி.ஆர்.வி குரூப்ஸ் வெள்ளையப்பதேவர், ஐந்தாம் பரிசு மேலூர் நொண்டிக் கோவில்பட்டி துரைப்பாண்டி, முருகன் நகை கடை, ஆறாம் பரிசு அயிலாங்குடி ஆதி குருசாமி நினைவாக கவியரசு ஆகியோரது மாட்டுவண்டிகள் வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்களுக்கு பரிசு தொகையும், வெற்றி கோப்பை விழா கமிட்டியினர் வழங்கினர்.

அதனை தொடர்ந்து சைக்கிள் ரேஸ் நடைபெற்றது.

சைக்கிள் ரேஸ் கட்டக்காளைபட்டி முதல் ஒக்கூர் வரை நடைபெற்றது. போக வர 30 கிலோ மீட்டர் தூரம், முதல் பரிசு கரூர் மாவட்டம் சந்தோஷ், இரண்டாம் பரிசு கட்டக்காளைபட்டி அரவிந்தன், மூன்றாம் பரிசு திருச்சி மாவட்டம், கார்த்திகைபட்டி மாதேஷ், நான்காம் பரிசு கரூர் மாவட்டம், கோகில கிருஷ்ணன் ஆகியோர் வெற்றி பெற்றனர். விழா ஏற்பாட்டினை கட்டக்காளை பட்டி கிராம பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.





• மதுரை மாநகர் மேற்கு 6- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் தலைமையில் கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க விளாங்குடி, கூடல்நகர் ஆகிய பகுதிகளில் நீர், மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், கணேஷ்பிரபு, வி.பி.ஆர். செல்வகுமார், கவுன்சிலர் நாகஜோதிசித்தன், வட்ட செயலாளர்கள் பி.என்.சுந்தர்ராஜன், கேசவன், கறிக்கடை மலைச்சாமி, கூடல்நகர் விஜயகுமார், நாராயணன், ஜஸ்டின்ராஜா, உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## சித்திரை திருவிழாவில் காவல் துறையினருக்காக

# வருடந்தோறும் அன்னதானம் வழங்கும் மதுரை இன்ஜினீயர் கமலக்கண்ணன்



**மதுரை, ஏப். 27-**

உலகப் புகழ் பெற்ற மதுரை சித்திரை திருவிழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் மத்தியில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல், அதன் பிறகு வண்டியூர் திருவிழா தசாவதாரம் என பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்து மதுரையிலிருந்து அழகர் மலைக்கு புறப்படும் முன்பாக தல்லாகுளம் கருப்பண்ண சுவாமி கோவிலில் பூப்பல்லக்கு நிகழ்ச்சியில் பங்கேற்கும் கள்ளழகர் பூப்பல்லக்கில் அலங்காரமாகி மதுரை மக்களிடமிருந்து விடை பெற்று அழகர் மலை செல்வார்

இந்த திருவிழாக்கள் முழுவதிலும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பாதுகாப்பிற்காக மதுரைக்கு வருகை தரும் காவல்துறையினர் வேலை களைப்பால் அசந்து போய் உட்காரக் கூட இடம் இன்றி தவித்து வருவார்கள்.

திருவிழா நடைபெறும் பகுதியில் சாப்பாட்டு கடைகள் எல்லாம் திறந்து இருக்காது

கள்ளழகர் திருவிழா நடைபெறும் இந்த மூன்று நாட்களிலும் பணிபுரிந்து விட்டு வேலை களைப்பில் பணம் கொடுத்தாலும் சாப்பிட இயலாத சூழ்நிலையில் இருக்கும் காவலர்களுக்காக வருடா வருடம் மதுரை தல்லாகுளத்தில் உள்ள, ரெங்கா பிளானர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் சேர்மன் இன்ஜினியர் கமலக்கண்ணன் 12 வகை அறுசுவை உணவுடன் காவலர்கள் மற்றும் வெளியூரில் இருந்து வரும் பொதுமக்கள் அமர்ந்து சாப்பிட்டு களைப்பாறி செல்வதற்கான வழிவகைகளை செய்துள்ளார்

அறுசுவை உணவு அன்னதான ஏற்பாடுகளை ரெங்கா பிளானர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சேர்மன் இன்ஜினியர் கமலக்கண்ணன் ரெங்கா பிளானர்ஸ் நிறுவன டைரக்டர் மகாலட்சுமி ரெங்கா பிளானர்ஸ் நிர்வாகிகள் இன்ஜினியர் திருப்பதி ராஜா இன்ஜினியர் வேல் பாண்டியன் கிருபாகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர் இது காவலர்கள் மத்தியிலும் வெளியூரிலிருந்து வரும் பொதுமக்கள் மத்தியிலும் சிறந்த வரவேற்பை பெற்றுத் தந்து அவரை பொதுமக்களும் காவலர்களும் பாராட்டி வருகின்றனர்.

# திருமங்கலம் வழக்கறிஞர் சங்க தேர்தலில் தலைவராக சி.ராமசாமி மீண்டும் தேர்வு



**திருமங்கலம், ஏப். 27-**

திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்தின் 2024- 2025ம் ஆண்டிற்கான நிர்வாக குழுவிற்கு நடைபெற்ற தேர்தலில் சங்கத்தின் தலைவராக வக்கீல் சி.ராமசாமி மீண்டும் தேர்வு செய்யப்பட்டார்.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் செயல்பட்டு வரும் திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்திற்கு 2024- 2025 ம் ஆண்டிற்கான நிர்வாக குழுவினை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்தில் மொத்தம் 229 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். தில் 178 பேருக்கு ஓட்டு உரிமை உள்ள நிலையில் 176 பேர் நேற்று நடைபெற்ற தேர்தலில் ஓட்டு போட்டனர்.மதுரை பார் அசோசியேசனை சேர்ந்த வக்கீல் விஜயன் தேர்தல் நடத்தும் அலுவலராக பணியாற்றினார்.

தமிழ்நாடு பார் கவுன்சில் இணைத்தலைவர் வக்கீல் அசோக் தேர்தல் பார்வையாளராக செயல்பட்டார். இதனை தொடர்ந்து ஓட்டுப் பதிவு நிறைவடைந்து

நேற்று மாலை ஓட்டுக்கள் எண்ணப்பட்டது. இதில் திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்தின் முன்னாள் தலைவர் சி.ராமசாமி மீண்டும் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.முன்னாள் செயலாளர் அறிவொளி மீண்டும் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்துபொருளாளராக தினேஷ்பாபு, துணைத் தலைவராக கண்ணன், இணைச் செயலாளராக விஜய், நிர்வாக குழு உறுப்பினர்களாக கனகராஜ், பழனிவேல், பாரதி, காளீஸ்வரி, முகமது அசாருதீன், ரமேஷ் குமார், ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதையடுத்து புதிதாக தேர்வு செய்யப்பட்ட திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் சி.ராமசாமி, செயலாளர் அறிவொளி மற்றும் அனைத்து நிர்வாகிகளுக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர் வக்கீல் விஜயன், தேர்தல் பார்வையாளர் வக்கீல் அசோக் ஆகியோர் சான்றிதழ்களை நேரில் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் பிரசித்தி பெற்ற பொன்வரதராஜ பெருமாள் சித்திரை திருத்தேர் முதல் நாள் கைலாய மேளம் வாசிக்க ஏராளமான பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். தேர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து கவரைத்தெரு வழியாக பெரிய கடைவீதியில் இடைநிறுத்தப்பட்டது.

# நாமக்கல்லில் அதிமுக சார்பில் நீர்-மோர் பந்தல் முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி திறந்து வைத்தார்




**நாமக்கல்,ஏப்.27-**

கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் அதிமுக சார்பில் அமைக்கப்பட்ட நீர்-மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி பழங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

கோடை வெப்பத்தால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுவதால், அதிமுகவினர் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் அவர்களின் தாகத்தை தணிக்கும் வகையில் நீர்-மோர் பந்தலை திறக்க வேண்டும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி கட்சியினருக்கு அறிவுறுத்திருந்தார். அதன்படி நாமக்கல் - நேதாஜி சிலை அருகில் மூன்று சிலைகள் உள்ள தந்தை பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர் சிலை அருகே அதிமுக சார்பில் நீர்-மோர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் நகர செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.பி.பாஸ்கர் தலைமை தாங்கினார். இதில் கழக அமைப்பு செயலாளரும், நாமக்கல் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி கலந்துகொண்டு நீர்-மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், குளிர்பானம், தர்பூசணி பழங்களை வழங்கினார்.

முன்னதாக அங்கிருந்த தந்தை பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர் ஆகிய சிலைகளுக்கு முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் மயில்சுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் சேகர், கோபிநாத், ராஜா என்கிற செல்வகுமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் முரளி பாலுசாமி, மாவட்ட ஊராட்சியின் முன்னாள் தலைவர் காந்தி முருகேசன், எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் குப்புசாமி மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தருமபுரி வட்டாரத்தில் திட்ட செயலாக்க குழு கூட்டம் வேளாண்மை இணை இயக்குநர் தலைமையில் நடைபெற்றது



**தர்மபுரி,ஏப்.27-**

தர்மபுரி வட்டாரத்தில் 2024-25 ஆம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட தர்மபுரி வட்டாரதிற்குட்பட்ட கோணங்கி நாயக்கன அள்ளி, கே. நடுஅள்ளி, ஆண்டி அள்ளி, செம்மண்ட குப்பம், வே.முத்தம்பட்டி ஆகிய ஐந்து கிராமங்களின் திட்ட செயலாக்க குழு கூட்டம் தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணன் அவர்களின் தலைமையில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்குழு கூட்டத்தில் தரிசு நிலங்கள் தொகுப்பு கண்டறிதல், தரிசு நிலங்களை விலை நிலங்களாக மாற்றுதல், வரப்பு பயிர் சாகுபடி ஊக்குவித்தல் மற்றும் மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் ஜிப்சம், ஜிங்சல்பேட் மானிய திட்டங்கள் குறித்து தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணன் விரிவாக எடுத்துரைத்தார். அதை தொடர்ந்து கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கி ணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் குறித்து தருமபுரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் தருமபுரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) தேன்மொழி , தர்மபுரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் , தர்மபுரி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அபிலா , தர்மபுரி வட்டார வேளாண்மை அலுவலர்கள் இளவரசி மற்றும் ரேவதி, தோட்டக்கலை அலுவலர் அசோக் , தர்மபுரி வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் பெரியசாமி, பச்சமுத்து, சுப்பிரமணியன், மணிவண்ணன், தர்மபுரி வட்டார உதவி தோட்டகலை அலுவலர்கள் கோவிந்தன், புவனேஷ்வரி, குப்புசாமி, செந்தில்குமார், ஆகியோர் மற்றும் வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத் துறை, பொறியியல் துறை, கால்நடை துறை, மீன்வள துறை, பட்டு வளர்ச்சித் துறை, கூட்டுறவு துறை, ஊரக வளர்ச்சி துறை, பஞ்சாயத்து தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் செயலாளர்கள், அனைத்து துறை சார்ந்த தலைவர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# கோடை காலத்தில் விவசாயிகள் சிறப்பு சாகுபடி திட்ட முறைகளை கையாள வேண்டும்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தகவல்

**சேலம்,ஏப்.27-**

கோடை காலத்தில் விவசாயிகள் சிறப்பு சாகுபடி திட்ட முறைகளை கையாள வேண்டும். இதுகுறித்து, கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:

கோடை வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துவரும் சூழ்நிலையில் விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் வேளாண்மைத் துறையால் தெரிவிக்கப்படும் சிறப்பு சாகுபடி திட்ட முறைகளை கையாண்டு கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து தங்களது சாகுபடி பயிர்களைப் பாதுகாத்து, அதிக இலாபம் பெற்றிடலாம். குறிப்பாக, கோடை வெயிலின் காரணமாக நிலத்தில் உள்ள ஈரப்பதம் விரைவாக குறைந்திட வாய்ப்புள்ளதால் தேங்காய் மட்டை, நார்களைக் கொண்டு மா, பலா, வாழை, பழ வகைச் செடிகள், மலர் செடிகள் உள்ளிட்ட சாகுபடிப் பயிர்களின் அடிப்பகுதிகளைச் சுற்றிலும் தரையில் பரப்பி வைத்து மூடாக்கு அமைத்திடலாம்.

மேலும், தேவைக்கேற்ப மலர் செடி, கொடிகள், பழச் செடிகள் ஆகியவற்றிற்கு மேல் தற்காலிக நிழல் வலைகள் அமைத்துக் கொள்வதால் வெயிலின் தாக்கத்தால் மகசூல் குறைவதை விவசாயிகள் தவிர்க்க முடியும். குறிப்பாக, பழ வகைகள் உள்ளிட்ட எவ்வித பயிர்களைச் சாகுபடி செய்வதாக இருந்தாலும் வறட்சியைத் தாங்கக் கூடிய பயிர்களையே தேர்வு செய்து பயிரிடலாம்.

கோடை காலத்தில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி சொட்டு நீர் பாசன முறையை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு விவசாயிகள் தங்களது பயிருக்கு காலை 8 மணி அல்லது 9 மணிக்குள் மற்றும் மாலை 5 மணிக்குப் பின் நீர் பாய்ச்சிட உகந்த நேரமாகும். குறிப்பாக, கோடை மழை பெய்யும் போது விவசாயிகள் தங்களது நிலத்தில் கோடை உழவு செய்திட வேண்டும். இதனால் மண்ணின் அடியில் உள்ள களை விதைகள் மற்றும் தீமை செய்யும் பூஞ்சாணங்கள், பூச்சிகள் அழிக்கப்படும். மேலும், மழை நீர் மண்ணுக்கடியில் எளிதில் புகுந்து ஈரப்பதத்தை தக்க வைப்பதுடன் பயிரின் வேர்கள் எளிதில் மண்ணில் பரவி உர தேவையை குறைத்து செழிப்பாக வளர்வதுடன் கூடுதல் மகசூல் கிடைத்திட வாய்ப்பாக அமைகிறது.

அதேபோன்று, அதிக நீர் தேவையின்றி குறைந்த சாகுபடி செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய எள் பயிரையும் கோடையில் சாகுபடி செய்யலாம். எள் சாகுபடி செய்ய ஏக்கருக்கு 2 கிலோ விதை அளவே போதுமானதாகும். எள் பயிர் அனைத்து வகை மண்ணிலும் நன்றாக வளரக் கூடியது. மேலும், நிலக்கடலைப் பயிரை நல்ல நீர் ஆதாரம் உள்ள மேட்டுப்பாங்கான நிலங்களில் பயிரிட்டு அதிக இலாபம் ஈட்டலாம். கோடை சாகுபடிக்குத் தேவையான விதைகள் மற்றும் உயிர் உரங்கள் அனைத்து வட்டார வேளாண்மை மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளன. விவசாயிகள் இதனை 50 சதவிகித மானியத்தில் பெற்றுப் பயன்பெறலாம்.

திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் நீர் ஆதாரம் உள்ள விவசாயிகள் ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதத்திற்குள் எள், நிலக்கடலை மற்றும் பயறு வகை சாகுபடி செய்து அதிக இலாபம் பெறலாம். மேலும், விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு வேளாண் வானிலை வலையிணைப்பான www.agritech.tnau.ac.in என்ற இணைதளத்தில் சேலம் சந்தியூர் வேளாண்மை அறிவியல் மையத்தால் (KVK) வழங்கப்படும் வானிலை முன் அறிவிப்பினை தங்களது செல்போனில் இருந்தவாறு பார்த்து தெரிந்து கொண்டு அதற்கேற்ப வேளாண் பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகிப் பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

# அதிமுக சார்பில் தண்ணீர் பந்தல்: முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் திறந்து வைத்தார்



**தர்மபுரி ,ஏப்.27-**

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அதிமுக நகர கழகம் சார்பில் பாலக்கோடு BDO ஆபிஸ் முன்பு தண்ணீர் பந்தல் திறப்பு விழா பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கே.பி.அன்பழகன் தலைமையில் ,ஏப்ரல், 26, வெள்ளிக்கிழமை, நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி தண்ணீர் பந்தலை திறந்து வைத்தவர்,

கோடை வெயில் தாக்கத்தில் இருந்து பொது மக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் தர்பூசணி, இளநீர், நீர்மோர் , வெள்ளரிக்காய், பனை நுங்கு உள்ளிட்டவைகளை பொதுமக்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கட்சி நிர்வாகிகள் , தொண்டர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

# சேலம் மாநகராட்சி பகுதிகளிலுள்ள சொத்து உரிமையாளர்கள் சொத்துவரியினை செலுத்தி 5 சதவீத ஊக்கத்தொகை பெறலாம்

## ஆணையாளர் சீ.பாலச்சந்தர் தகவல்

**சேலம் ,ஏப்.27-**

தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 84ன் படி சொத்து உரிமையாளர்கள் தங்களது 2024-2025ம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30ம் தேதிக்குள் செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் 5 சதவீத ஊக்கத் தொகை பெற தகுதியுடையவர்கள். நடப்பு 2024-2025-ம் நிதியாண்டிற்கான மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் முதலியவற்றை செலுத்த ஏதுவாக பொதுமக்கள் வசதி கருதி இம்மாதம் 28.04.2024-ம் தேதியன்று சிறப்பு வரிவசூல் முகாம்கள் நடைபெற உள்ளதாக சேலம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சேலம் மாநகராட்சி ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.3-ல் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி குரங்குச்சாவடி, கோட்டம் எண். 25-ல் கூட்டுறவு வேளாண்மை சொசைட்டி பள்ளப்பட்டி .

அஸ்தம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.17-ல் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் அழகாபுரம் , கோட்டம் எண்.29-ல் வெங்கடப்ப செட்டி, அம்மா உணவக வளாகம்.

அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.35-ல் மாநகராட்சி துவக்கப்பள்ளி ஆதிசெல்வன் தெரு, கோட்டம் எண்.37-ல் காமராஜர் நகர் துவக்கப்பள்ளி உழவர் சந்தை அருகில்.

கொண்டலாம்பட்டி மண்டலத்திற்குட்பட்ட கோட்டம் எண்.59-ல் பெருமாள் கோவில் மேடு, காளியம்மன், மாரியம்மன் கோவில் மண்டபம், கோட்டம் எண்.60-ல் கிருத்திகா அப்பார்ட்மெண்ட், கோவிந்தம்மாள் நகர் ஆகிய பகுதிகளில் வரிவசூல் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

மேலும், 28.04.2024 ஞாயிற்று கிழமை அனைத்து வரிவசூல் மையங்களும் வழக்கம் போல் காலை 9 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படும். எனவே பொதுமக்கள் இவ்வசதியினை பயன்படுத்தி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டியவரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்தலாம். இவ்வாறு சேலம் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத்துடன் முன்னாள் மாவட்ட தலைவர் எல்.சுப்ரமணி சந்திப்பு

**கிருஷ்ணகிரி,ஏப்.27-**

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு கடந்த ஒரு மாதமாக அனல் பறக்கும் பிரசாரம் முடிந்து முதல் கட்ட வாக்கு பதிவு முடிந்த நிலையில் காங்கிரஸ் கட்சி முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவரும் மாநில பொதுக்குழு உறுப்பினரும் தொழிலதிபருமான எல்,சுப்பிரமணி கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தேர்தல் காங்கிரஸ் வேட்பாளரும் முன்னாள் ஒசூர் சட்டமன்ற உறுப்பினருமான கோபிநாத்தை மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்

இதில் காங்கிரஸ் கட்சியினர் முத்துக்குமார், முன்னாள் நகர தலைவர் தவமணி, மாவட்ட பொதுசெயலாளர் கோவிந்தன் வட்டார துணை தலைவர் பண்ணி ஹள்ளி கோவிந்தசாமி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்

மாண்பமை வணிகவியல் நீதிமன்றம்
முதுநிலை சிவில் நீதிபதி நிலை, சேலம்.
C.O.S.No. 1/2024

கனரா வங்கி,
அயோத்தியாபட்டணம்,
கிளையின் சார்பாக அதன் கிளை முதுநிலை மேலாளர் அவர்கள், சேலம்.
...வாதி

இடையே

S. தங்கராஜ், த/பெ.சுப்ரமணி,
இருப்பிட முகவரி :க.எண்.5/68, பெருமாள் கோவில் தெரு,காட்டுவளவு உடையாப்பட்டி, சேலம் - 636 140.
அலுவலக முகவரி :
க.எண்.97, 98, கிருஷ்ணன்புதூர், அம்மாப்பேட்டை, சேலம் - 636 003.
...பிரதிவாதி

பிரதிவாதிக்கு அறிவிப்பு

மேற்படி வாதி மேற்படி கோர்ட்டில் மேற்படி எண்ணில்பிரதிவாதி S. தங்கராஜ் ஆகிய தாங்கள் வாதி வங்கியிடம் இருந்து தானியங்கி விசைத்தறிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்கி தொழில் செய்ய ரூ.9,00,000/- கடன் தொகையை பெற்றுக் கொண்டு வாதி வங்கிக்கு தேவையான அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் இட்டு கொடுத்துள்ளீர். இவ்வாறு இருக்க பிரதிவாதியாகிய தாங்கள் வாங்கிய கடனை ஒப்புக்கொண்டவாறு உரிய காலத்தில் திருப்பி செலுத்தாத காரணத்தினால் மேற்படி கடன் தொகையை வட்டியுடன் திரும்ப வசூல் செய்வதற்காக வாதி வங்கியின் தரப்பில் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதியாகிய தாங்கள் மேற்படி கோர்ட்டில் ஆஜர் ஆவதற்காக வருகின்ற 07.06.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.30 மணியளவில் தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டியது. தவறினால் உங்களுக்கு எதிராக மேற்படி தாவா ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/
R.சீனிவாசன்,B.A.,L.L.B.,
வழக்கறிஞர்/நோட்டரி, சேலம்.

# கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளி 25-ஆம் ஆண்டு வெள்ளிவிழா



**கிருஷ்ணகிரி,ஏப்.27-**

கலை பண்பாட்டுத்துறை கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் 25.04.2024 ஆம் தேதி வியாழக்கிழமை அன்று தமிழிசை விழா, 25-ஆம் ஆண்டு வெள்ளிவிழா மற்றும் ஜவகர் சிறுவர்மன்ற ஆண்டு விழாவில் இசைப்பள்ளி மாணவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்து பாடினார்கள்.

விழாவின் தொடக்கத்தில் தலைமை ஆசிரியர் முனைவர் சு.கானமூர்த்தி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கலை பண்பாட்டுத்துறை சேலம் மண்டலம் உதவி இயக்குநர் சி.நீலமேகன் தலைமையேற்று விழா பேருரையாற்றியும் சிறந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகம் காப்பாட்சியர் செ.கோவிந்தராஜ் வாழ்த்துரையாற்றினார். இவ்விழாவில் முதல் நிகழ்ச்சியாக இசைப்பள்ளி மாணவர்கள் மங்கள இசை வாசித்தும் கலை நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தினர்கள். ஜவகர் சிறுவர்மன்ற மாணவர்கள் கலை நிகழ்ச்சி நிகழ்த்தினர்கள். இவர்களைத் தொடர்ந்து சிறப்பு இசைக்கலைஞர்களான முனைவர் ர.காஷ்யப் மகேஷ் குழுவினரின் குரலிசை நிகழ்ச்சியும், வி.சுகு சக்கரபாணி குழுவினரின் வயலின் இசை நிகழ்ச்சியும், திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்களின் திருமுறை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்விழாவில் அனைத்து ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு இவ்விழாவினை சிறப்பித்தார்கள். நிகழ்ச்சியின் நிறைவில் தவில் ஆசிரியர் கலைமாமணி வ.சீ.சீனிவாசன் நன்றியுரையாற்றினார்.

# காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத்துடன் முன்னாள் மாவட்ட தலைவர் எல்.சுப்ரமணி சந்திப்பு



**கிருஷ்ணகிரி,ஏப்.27-**

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு கடந்த ஒரு மாதமாக அனல் பறக்கும் பிரசாரம் முடிந்து முதல் கட்ட வாக்கு பதிவு முடிந்த நிலையில் காங்கிரஸ் கட்சி முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவரும் மாநில பொதுக் குழு உறுப்பினரும் தொழிலதிபருமான எல்.சுப்ரமணி கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தேர்தல் காங்கிரஸ் வேட்பாளரும் முன்னாள் ஒசூர் சட்டமன்ற உறுப்பினருமான கோபிநாத்தை மரியாதை நிமித்தமாக அவரது இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார் இதில் காங்கிரஸ் கட்சியினர் முத்துக்குமார், முன்னாள் நகர தலைவர் தவமணி, மாவட்ட பொதுசெயலாளர் கோவிந்தன் வட்டார துணை தலைவர் பண்ணி ஹள்ளி கோவிந்தசாமி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# முசிறி எம்.ஐ.டி. வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் பயிற்சி முகாம்

**தொட்டியம்,ஏப்.27-**

தொட்டியம் ஒன்றியம் பாலசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, தண்ணீரை சேமிப்பது குறித்தும், இயற்கை வேளாண்மை மூலம் மாடித்தோட்டம் அமைத்து நாமே காய்கறிகளை உற்பத்தி செய்வது எப்படி என்ற பயிற்சி முகாமினை முசிறி எம்.ஐ.டி. வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவிகள் நடத்தினர். நிகழ்வின் ஒரு பகுதியாக தொட்டியம் ஒன்றியம் பாலசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தண்ணீரை எப்படி சேகரிக்கலாம் என்றும் மாடித் தோட்டம் மூலம் நாமே இயற்கை வேளாண்மை செய்து காய்கறிகளை உண்டு ஆரோக்கியமாக இருக்கலாம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி அது பற்றிய விவரங்களை வரைபடம் மூலமாக விளக்கினர். இந்நிகழ்ச்சிக்கு அப்பள்ளி தலைமை ஆசிரியர் கீதா ராணி தலைமை வகித்தார்;. முன்னதாக மாணவி ரத்னா வரவேற்று பேசினார். இதில் அப்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் விழிப்புணர்வு பேச்சினை கண்டுகளித்தனர்.

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **S. VARSHA D/o. Subramani .P Aged about 24 Years, Permanently Residing at : D.No.73/36, Pavendar Street, Salem, Salem (DT), Tamilnadu - 636 009.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**S. VARSHA**

ENROLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three Months thereafter. I, **R. DHILEEPAN S/o. R. Rangasamy Date of Birth : 17.05.2000, Aged 24 Years, Permanently Residing at : D.No.14/29, Ramasamy Street No.4, Rasipuram (TK), Namakkal (DT) Tamilnadu - 637 408.** Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai- 600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**R. DHILEEPAN**

காணவில்லை

சேலம்–636 016, அழகாபுரம், ஏஏ ரோடு, நெ.13-260-Aல் இயங்கி வரும் Chola Rank Towers Pvt. Ltd. நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்கள் திரு.P.அசோக் மற்றும் திரு. S.K செந்தில்குமார், என்பவர்கள், மேற்படி Chola Rank Towers Pvt. Ltd என்ற நிறுவனத்தின் பெயரில் 18–08–2017ம் தேதியில் ஏற்பட்டு சூரமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் ஆவணம் எண்.3669/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அசல் கிரய பத்திரத்தை, (இந்த கிரய சொத்து ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்திற்கு உட்பட்ட ஜாகீர் காமநாய்க்கன்பட்டில் பழைய சர்வே எண்.12/1 க்கு T.S.No.2/2 & 2/3 பிளாக் நெ.13 ஆகும்) கடந்த 15.03.2024ம் தேதி காலை 11.30 மணியளவில் ஜாகீர் காமநாய்க்கன்பட்டி BURN & CO அருகில் உள்ள மேற்படி Chola Rank Towers Pvt. Ltd க்கு சொந்தமான காலி நிலத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு பார்க்கும் போது மேற்படி அசல் கிரயப் பத்திரம் காணவில்லை. எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். இந்த அறிவிப்பு இருந்தும் யாரெனும் மேற்படி அசல் கிரயபத்திரத்தை வைத்து மேற்படி நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தில் வில்லங்கள் ஏதேனும் ஏற்படுத்தினால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியவும்.

A. சுப்பரமணியம், B.A.,B.L.,
அட்வகேட், நோட்டரி பப்ளிக், 34, செரிரோடு, அஸ்தம்பட்டி, சேலம் – 636 007. Cell No. 9443091922.

அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை

சேலம் மாவட்டம், - 636 008, சின்னதிருப்பதி, அய்யனார் கோவில் காடு, க.எண்.112 ல் வசிக்கும் C.நந்தகுமார்,B.S.M.S., என்பவரின் மனைவி 47 வயதுடைய சித்த மருத்துவர் திருமதி. M.உமா ஆகிய நான் பொதுமக்களுக்கு அறிவிக்கும் அறிவிப்பு யாதெனில் எனது அம்மாவின் ஜலகண்டாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் **593/1976** ம் ஆண்டு பதிவு நாள் **17.05.1976** நங்கவள்ளியில் இருக்கும் வீட்டு மனை நிலம் சதுரடி **2068** புல எண். **168/1** எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்ட இந்த காலி மனை நில சொத்தின் அசல் ஆவணத்தை நான் கடந்த **10.04.2024** ல் அன்று காலை சுமார் 11.00 மணியளவில் மஞ்சள் பையில் ஜெராக்ஸ் எடுப்பதற்காக வீட்டிற்கு அருகில் இருக்கும் சின்னதிருப்பதி மெயின் ரோட்டில் உள்ள ஒரு ஜெராக்ஸ் கடைக்கு சென்றபோது எனது வண்டியில் மாட்டியிருந்த மஞ்சள் பையை ஆவணத்துடன் (593/1976) காணவில்லை. மீண்டும் வந்த வழியே தேடியும் விசாரித்தும் பார்த்தும் இது நாள் வரை கிடைக்கவில்லை. அதனை கண்டுபிடித்திடுவோர் எனது கைப்பேசி **63827 62260** எண்ணிற்கோ அல்லது கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு: M.உமா, க.பெ. C.நந்தகுமார்,B.S.M.S.,
க.எண்.112, அய்யனார் கோவில் காடு, சின்னதிருப்பதி, சேலம் -8.




**கோடைக்கால கடுமையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க திருவொற்றியூர் மேற்கு பகுதி அதிமுக சார்பில் அஜாக்ஸ் மெட்ரோரயில் நிலையம் அருகேகுடிநீர் பந்தல் திறப்பு விழா முன்னாள்எம்எல்ஏகே.குப்பன்தலைமையில்மாவட்டசெயலாளர்மாதவரம்வி.மூர்த்திஅமைப்பு செயலாளர் ராயபுரம் ஆர்.மனோ ஆகியோர் திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர் மோர் பழங்களை வழங்கினார்கள்.**

# கோயம்பேடு மற்றும் சுற்றுப்புறங்களில் பூட்டை உடைத்து திருடிய வாலிபர் கைது

**சென்னை ஏப் 27-**

சென்னை, கெருகம்பாக்கம், விக்னேஸ்வரா நகரைச் சேர்ந்த நரேஷ்குமார், என்பவர் கோயம்பேடு, பெரியார் மார்க்கெட் வளாகத்தில் செல்போன் விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடை நடத்தி வருகிறார். நரேஷ்குமார், கடந்த 24 ந் தேதி அன்று இரவு மேற்படி அவரது கடையை பூட்டிவிட்டு மறுநாள் காலை பார்த்தபோது, அவரது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு கடையிலிருந்த 3 செல்போன்கள் மற்றும் பணம் ரூ.3,000/- திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து நரேஷ்குமார் கோயம்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.கோயம்பேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்தும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட பாண்டி (எ) பாண்டியன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 3 செல்போன்கள் மற்றும் பணம் ரூ.3,000/- ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பாண்டியன் சென்னை, அரும்பாக்கம், அண்ணாநகர், அமைந்தகரை மற்றும் சூளைமேடு காவல் நிலைய எல்லைகளில் உள்ள கடைகளின் பூட்டுகளை உடைத்து திருடியது தெரியவந்தது. மேலும் விசாரணையில் இவர் மீது ஏற்கனவே, செய்யாறு, வேலூர் குடியாத்தம், பள்ளிப்பட்டு காவல் நிலைய எல்லைகளில் பூட்டை உடைத்து திருடிய வழக்குகள் உள்ளது தெரிய வந்தது.கைது செய்யப்பட்ட எதிரி பாண்டியன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



**திருச்சியில்யுனிவேர்சல்தவ்ஹீத்ஜமாத்இயக்கத்தின்சார்பில் பீமநகரில் உள்ள யாதவ தெருவில் நடைபெற்ற ஆம்புலன்ஸ் அர்ப்பணிக்கும்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கி வைத்து பேசினார்.இதில், மேயர் அன்பழகன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.**

# சென்னை விமான நிலையத்தில் குப்பை தொட்டியில் ரூ.75 லட்சம் தங்கம்

**சென்னை ஏப் 27-**

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் நள்ளிரவு முதல் அதிகாலை வரையில் அதிகளவில் விமானங்கள் வருவது வழக்கம். வெளிநாடுகளில் இருந்து வரும் ஆயிரக்கணக்கான பயணிகளின் உடைமைகள், பாஸ்போர்ட் போன்றவற்றை குடியுரிமை அதிகாரிகள் சோதனை செய்வார்கள்.

பரபரப்பாக காணப்படும் விமான நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு தூய்மை பணியாளர்கள் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். சோதனை செய்யக் கூடிய பகுதிக்கு அருகில் இருந்த ஒரு குப்பை தொட்டியை சுத்தம் செய்த போது அதில் ஒரு பார்சல் இருந்தது. அதனை எடுத்த ஊழியர் ஒருவர் அதிகாரிகளிடம் ஒப்படைத்தார்.பின்னர் இதுபற்றி சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த பார்சலை பிரித்து பார்த்த போது அதில் தங்க கட்டிகள் இருந்தன. 1,200 கிராம் எடை உள்ள தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.75 லட்சம் என கணக்கிடப்பட்டது.வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த பயணி யாரோ ஒருவர் பரிசோதனையின் போது சிக்கி கொள்வோம் என பயந்து குப்பை தொட்டியில் போட்டு இருக்கலாம் என கருதப்படுகிறது.இதையடுத்து அந்த பகுதியில் உள்ள சி.சி. டிவி. கேமராக்கள் உள்ள பதிவினை ஆய்வு செய்தனர். அதில் முகம் தெளிவாக தெரியவில்லை. அதனை தொடர்ந்து மற்ற கோணங்களில் பதிவான கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

# திருமுல்லைவாயலில் பெண்களை ஆபாசமாக பேசிய தகராறில் 12 பேரை சரமாரி வெட்டிய 2 பேர் கைது

**சென்னை ஏப் 27-**

ஆவடி அருகே திருமுல்லைவாயலில் பெண்களை ஆபாசமாக பேசியதில் ஏற்பட்ட வாய்த்தகராறில் 12 பேரை கத்தியால் சரமாரி வெட்டிய கும்பலை சேர்ந்த 2 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும், தலைமறைவான ஒருவரை தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர்.

இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. ஆவடி அருகே திருமுல்லைவாயல், சோழம்பேடு சாலை, கணபதி நகரை சேர்ந்தவர்கள் அபினேஷ் (25), விஷ்ணு (22), முத்து (24). ஏசி மெக்கானிக்குகளான 3 பேரும் அடிக்கடி மது மற்றும் கஞ்சா போதையில், தாங்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் நுழைவுவாயிலில் அமர்ந்து, அவ்வழியாக நடந்து செல்லும் பெண்களை தரக்குறைவாக பேசி, கேலி கிண்டலுடன் தகராறில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், வழக்கம் போல் அபினேஷ், விஷ்ணு, முத்து ஆகிய 3 பேரும் குடியிருப்பின் வாசலில் அமர்ந்து, அவ்வழியே நடந்து செல்லும் இளம்பெண்களை தரக்குறைவாக பேசி கிண்டலடித்து கொண்டிருந்தனர். இதில் ஆத்திரமான அதே பகுதியை சேர்ந்த சீதாலட்சுமி (38) என்ற பெண், 3 பேரையும் தட்டிக் கேட்டுள்ளார். சீதாலட்சுமியுடன் அவரது மகன் கமலேஷ் (17) என்பவரும் வாய்த்தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் கஞ்சா போதையில் அபினேஷ், விஷ்ணு, முத்து ஆகிய 3 பேரும் அறைக்குள் மறைத்து வைத்த 2 பட்டாக்கத்திகளை எடுத்து வந்து, சீதாலட்சுமி மற்றும் அவரது மகனை சரமாரி வெட்டியுள்ளனர். இதில் தாய், மகன் ஆகிய இருவரும் படுகாயம் அடைந்தனர்.போதையில் தாக்குதல் நடத்திய 3 பேரையும் அப்பகுதியை சேர்ந்த சந்திரலேகா (40) என்ற பெண்ணும் அவரது மகன் விஜய் (20) என்பவரும் தடுக்க முயன்றுள்ளனர். இதில் ஆத்திரமான 3 பேரும் அவர்கள் இருவரையும் பட்டாக்கத்தியால் சரமாரி வெட்டியுள்ளனர். இதேபோல் அப்பகுதியை சேர்ந்த 12 பேரை கஞ்சா போதையில் இருந்த அபினேஷ், முத்து, விஷ்ணு ஆகிய 3 பேரும் பட்டாக்கத்தியால் சரமாரி வெட்டியதில் படுகாயம் அடைந்தனர். இது குறித்து காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர். இதுகுறித்து தகவலறிந்ததும் திருமுல்லைவாயல் போலீசார் விரைந்து வந்தனர். அங்கு கஞ்சா போதையில் சுற்றி திரிந்த அபினேஷ், விஷ்ணு ஆகிய இருவரையும் பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்தனர். மேலும், பட்டாக்கத்தி தாக்குதலில் படுகாயம் அடைந்த 12 பேரையும் அம்பத்தூர், திருமுல்லைவாயலில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கு அவர்கள் அனைவரும் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்புகாரின்பேரில் திருமுல்லைவாயல் போலீசார் வழக்குப்பதிவு செய்து, பெண்களை தரக்குறைவாக பேசி, தட்டிக் கேட்ட 12 பேரையும் பட்டாக்கத்தியால் சரமாரி வெட்டிய அபினேஷ், விஷ்ணு ஆகிய இருவரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். மேலும், இவ்வழக்கில் தலைமறைவான முத்து என்பவரை போலீசார் தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர்.

# பாம்பு பண்ணையில் 3டி தொழில்நுட்ப வசதி

**சென்னை ஏப் 27-**

கிண்டியில் உள்ள பழமை வாய்ந்த பாம்பு பண்ணை, இந்திய அளவில் புகழ்பெற்றது. 1972ம் ஆண்டில் இந்தியாவில் முதல் முறையாக துவக்கப்பட்ட இந்த பாம்பு பண்ணை, சென்னை மாநகருக்குள் இருப்பதால் தினம்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இங்கு வந்து பாம்புகளை பார்வையிட்டு செல்கின்றனர்.

இந்த பாம்பு பண்ணை ஒரு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேலும் இங்கு, பாம்புகளை இனப்பெருக்கம் செய்தல், பாம்புகளின் வகைகள் மற்றும் அவற்றின் குணாதிசயங்கள் குறித்து மாணவர்களுக்கு வகுப்பு எடுத்தல், பாம்புகள் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவுதல் எனப் பலவிதமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் பாம்புகள் பற்றி அறிந்து கொள்ளும் விதமாக புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டு உள்ளன. இங்கு, பல்வேறு வகையான பாம்புகள், முதலைகள், ஆமைகள், ஓணான் வகைகள், பச்சோந்தி, உடும்பு உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் இந்த பாம்பு பண்ணையில் வன உயிரினங்களை அருகில் இருந்து தொட்டு பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் '3டி' தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில், 3டி விர்ச்சுவல் ரியாலிட்டி ஷோ, டைனோசர் உலகம், நீருக்கடியில் உலகம், வனப்பகுதி உலகம் போன்ற காட்சிகள் உள்ளது. நாம் விரும்பும் காட்சிகளை தேர்வு செய்து கொள்ளலாம். இதற்கு ரூ.100 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் 3டி ஷோ, வன உயிரினங்களை அருகில் நின்று பார்ப்பது போன்றும், அவை நம்மை சீண்டுவது போன்று காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில் இந்த 3டி தொழில்நுட்பம் அனைவரின் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறத

கிண்டியில் உள்ள பழமை வாய்ந்த பாம்பு பண்ணை, இந்திய அளவில் புகழ்பெற்றது. 1972ம் ஆண்டில் இந்தியாவில் முதல் முறையாக துவக்கப்பட்ட இந்த பாம்பு பண்ணை, சென்னை மாநகருக்குள் இருப்பதால் தினம்தோறும் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் இங்கு வந்து பாம்புகளை பார்வையிட்டு செல்கின்றனர். இந்த பாம்பு பண்ணை ஒரு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேலும் இங்கு, பாம்புகளை இனப்பெருக்கம் செய்தல், பாம்புகளின் வகைகள் மற்றும் அவற்றின் குணாதிசயங்கள் குறித்து மாணவர்களுக்கு வகுப்பு எடுத்தல், பாம்புகள் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவுதல் எனப் பலவிதமான செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் பாம்புகள் பற்றி அறிந்து கொள்ளும் விதமாக புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டு உள்ளன. இங்கு, பல்வேறு வகையான பாம்புகள், முதலைகள், ஆமைகள், ஓணான் வகைகள், பச்சோந்தி, உடும்பு உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில் இந்த பாம்பு பண்ணையில் வன உயிரினங்களை அருகில் இருந்து தொட்டு பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் '3டி' தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதில், 3டி விர்ச்சுவல் ரியாலிட்டி ஷோ, டைனோசர் உலகம், நீருக்கடியில் உலகம், வனப்பகுதி உலகம் போன்ற காட்சிகள் உள்ளது. நாம் விரும்பும் காட்சிகளை தேர்வு செய்து கொள்ளலாம். இதற்கு ரூ.100 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் 3டி ஷோ, வன உயிரினங்களை அருகில் நின்று பார்ப்பது போன்றும், அவை நம்மை சீண்டுவது போன்று காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. கோடை விடுமுறை தொடங்கியுள்ள நிலையில் இந்த 3டி தொழில்நுட்பம் அனைவரின் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பதவி இல்லை என்றாலும் பொதுமக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்க்க போராடி வரும் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர்



**கரூர்,ஏப்ர.27-**

கரூர் மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணனை சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார் பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது கரூர் மாவட்டம் தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆண்டாங்கோவில் கிழக்கு மேற்கு கருப்பம்பாளையம் பள்ளாபாளையம் அப்பிபாளையம் விஸ்வநாதபுரி ஆகிய ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மிக கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது மேலும் அமராவதி ஆற்றின் இருபுறமும் உள்ள அனைத்து பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வது அமராவதி ஆற்றில் வரும் நீராகும் அமராவதி அணையில் இருந்து தண்ணீர் திறக்கும் போது கடைசி வரை செல்லாமல் தாராபுரம் பகுதியிலேயே தண்ணீர் நின்றுவிடுகிறது இதனால் மேற்சொன்ன பகுதிகளில் மிக கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகிறார்கள் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக அமராவதி ஆற்றில் இருந்து தாந்தோன்றி ஊராட்சி மற்றும் இதர பகுதிகளுக்கு செல்லும் அனைத்து குடிநீர் கிணறுகளிலும் குடிநீர் வற்றியுள்ளது ஆற்றில் தண்ணீர் இல்லாத நேரங்களில் லாரிகள் மூலமாக தினந்தோறும் போர்லைன் போட்டு தண்ணீர் எடுத்து விற்பனை செய்து வருகின்றனர்

இது சம்மந்தமாக பலமுறை புகார் அளித்தும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை தற்போது அணையில் 55 அடி நீர் உள்ளது ஒருமுறை ஆற்றில் தண்ணீர் திறந்தால் ஒரு மாதத்திற்கு குடிநீர் பிரச்சனை இல்லாமல் இருக்கும் ஆண்டாங்கோவில் மேல்பாகத்தில் வடிகால் பணி தொடங்கி நடந்து வருகிறது இப்பணி நிறைவு பெற்றால் அதில் வரும் நீர் கீழ்பாகத்திற்கு வந்து சேரும் இது குறித்து நீதிமன்றத்தை நாடினோம் மேல்பாகம் மற்றும் கீழ்பாகத்தில் வடிகால் கட்டலாம் என்று நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது மேலும் 40 நாட்களுக்குள் பணியை முடிக்கவும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது ஆனால் தாந்தோன்றி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்;;;சி அலுவலர் அந்த பணியை தடுத்து வருகிறார் எனவே மாவட்ட நிர்வாகம் இதில் தலையிட்டு வடிகால் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு தரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்று கூறினார் நிகழ்ச்சியின் போது கீழ்பாகம் பஞ்சாயத்து தலைவர் சாந்தி நாடாளுமன்ற வேட்பாளர் தங்கவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்

# சென்னை மீன்பிடி துறைமுகம் அருகே ரவுடியை கொலை செய்த 5 பேர் கைது

**சென்னை ஏப் 27-**

சென்னை, தண்டையார்பேட்டை, திடீர் நகர் 3வது தெருவில் வசித்து வந்த தேசிங்கு, என்பவர் சரித்திர பதிவேடு குற்றவாளி ஆவார். தேசிங்கு கடந்த 24. ந் தேதி அன்று மதியம் திடீர் நகர் மற்றும் எஸ்.என் செட்டி சாலை சந்திப்பு அருகே நின்றிருந்த போது, அங்கு வந்த சுமார் 10 நபர்கள் தேசிங்கிடம் தகராறு செய்து, கத்தியால் தாக்கி கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றனர். இது குறித்து இறந்துபோன தேசிங்கின் மனைவி கொடுத்த புகாரின்பேரில், மீன்பிடி துறைமுகம் காவல் நிலையத்தில் கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி கொலை சம்பவத்தில் ஈடுபட்ட 1.கோபி (எ) வெங்கடேசன், சென்னை, 2.பாரதி, 3.அகேஷ், 4.ரஜீத், ஆகிய 4 பேரை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 17 வயது இளஞ்சிறார் பிடிபட்டார். அவர்களிடமிருந்து 2 கத்திகள் மற்றும் 4 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கடந்த 2022ம் ஆண்டு எதிரி கோபி (எ) வெங்கடேசன் உட்பட சுமார் 10 பேர் இறந்துபோன தேசிங்கின் வீட்டிற்கு சென்று அவரது மகன் வல்லரசு எங்கே எனக்கேட்டு தகராறு செய்து, மகன் இல்லாததால், தேசிங்கை கத்தியால் தாக்கி விட்டுச் சென்றனர். இது தொடர்பாக, மீன்பிடி துறைமுகம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, கோபி (எ) வெங்கடேசன் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்றதும், இதன் முன்விரோதம் காரணமாக சமீபத்தில் பிணையில் வந்த்த கோபி மற்றும் அவரது நண்பர்கள் சேர்ந்து 24. ந் தேதி அன்று தேசிங்கை கத்தியால் தாக்கி கொலை செய்தது தெரியவந்துள்ளது.மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட கோபி (எ) வெங்கடேசன் மீது 1 கொலை முயற்சி உட்பட 3 குற்ற வழக்குகளும், அகேஷ் மீது 1 கொலை வழக்கும், ரஜீத் மீது 1 குற்ற வழக்கும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட மேற்படி 4 பேரை விசாரணைக்கப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். பிடிபட்ட இளஞ்சிறார் சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க் கப் பட் டார்.மே லும் இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவாக உள்ள நபர்களை பிடிக்க காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

**குடிபோதையில் வாகனத்தை ஓட்டாதே! குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தாதே!!**

# பெருங்குடி, கொடுங்கையூர் குப்பை கிடங்குகள் தீப்பற்றி எரியாமல் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கை

**சென்னை ஏப் 27-**

சென்னையில் கொளுத்தி வரும் கோடை வெயிலில் குப்பை கிடங்குகளில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்க மாநகராட்சி முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சென்னை பெருநகரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் பெருங்குடி, கொடுங்கையூர் ஆகிய இரண்டு கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

தினமும் 5 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பை நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து சேகரித்து தரம் பிரிக்கப்படுகிறது. இந்த குப்பை கிடங்குகளில் மலை போல் குவிந்திருக்கும் குப்பைகள் சுட்டெரிக்கும் வெயிலால் தீப்பிடித்து எரிவதையோ, சிறு தீப்பொறி மூலம் விபத்து ஏற்படுவதையோ தடுக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.ஜூன் மாதம் வரை குப்பை கிடங்குகளில் உள்ள குப்பைகளில் தண்ணீர் தெளிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடரும் என்று திடக்கழிவு மேலாண்மை கண்காணிப்பு பொறியாளர் பாலமுரளி தெரிவித்தார். 2018 மற்றும் 2022-ம் ஆண்டுகளில் இந்த இரண்டு கிடங்குகளிலும் பெரும் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

பெருங்குடியில் 225.16 ஏக்கர் குப்பை கிடங்கை கமிஷனர் ராதாகிருஷ்ணன் சமீபத்தில் ஆய்வு செய்தார்.

பெருங்குடி குப்பை கிடங்கில் 2021-ம் ஆண்டு சிறிய தீ விபத்து ஏற்பட்டது. அது உடனே கட்டுப்படுத்தப்பட்டது. தனியாரிடம் இருந்து 3 டேங்கர்கள் வாடகைக்கு எடுத்து குப்பை மீது தண்ணீர் தெளிக்கப்பட்டது. மேலும் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டியும் 2 கிடங்கிலும் கட்டப்பட்டு தண்ணீர் சேமித்துவைக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி லாரிகள் மூலம் தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. குப்பை குவியல்களுக்கு இடையே 3 மீட்டர் அகலமுள்ள வழித்தடங்களும் தீ பரவாமல் தடுக்க அமைக்கப்பட்டுள்ளது. வெயில் தாக்கத்தை பொறுத்து ஒரு நாளைக்கு 2 முறை அல்லது அதற்கு மேல் தண்ணீர் தெளிக்கப்படுகிறது என்று அதிகாரி தெரிவித்தார்.

இது தவிர தீயணைப்பு வாகனங்கள் அங்கு தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் பீடி, சிகரெட் துண்டுகளால் ஏற்படும் தீ விபத்தை தடுக்க மாநகராட்சி ஊழியர்கள் அந்த பகுதியில் தீவிரமாக கண்காணிக்கிறார்கள். குப்பை கிடங்கில் புகை ஏற்பட்டால் உடனடியாக அதனை அணைக்க அறிவுறுத்தப் பட் டுள் ளது.கோடை காலம் முடியும் வரை குப்பை கிடங்குகள் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்று அதிகாரி கூறினார்.



**சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக வர்த்தகர்அணி அமைப்பாளர் லயன் வீ.தியாகராஜன் தனது பிறந்தநாளையொட்டி தூய்மை பணியாளர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு வழங்கினார்.**

# சென்னை உஸ்மான் சாலையில் ஓராண்டுக்கு போக்குவரத்து மாற்றம்: போக்குவரத்து காவல் துறை அறிவிப்பு

**சென்னை ஏப் 27-**

சென்னை உஸ்மான் சாலையில் ஓராண்டுக்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ள என போக்குவரத்து போலீசார் அறிவித்துள்ளனர்.

**அறிவிப்பு**

சென்னை பெருநகர போக்குவரத்து காவல் ஒரு செய்தி குறிப்பை வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதவாது

மேட்லி சந்திப்பு தெற்கு உஸ்மான் சாலை முதல் வடக்கு உஸ்மான் சாலை வரை மேம்பாலம் கட்டுமானப் பணி துவங்க உள்ளதால் இன்று (27.04.2024 முதல் 26.04.2025) வரை ஒரு வருடத்திற்கு பின்வரும் போக்குவரத்து மாற்றுப்பாதைகள் செயல்படுத்தப்படும்.

வடக்கு உஸ்மான் சாலையில் இருந்து தி.நகர் பேருந்து நிலையம் நோக்கி வரும் வாகனங்கள் பனகல் பார்க் அருகில் உள்ள உஸ்மான் சாலை மேம்பாலத்தில் செல்ல தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக வாகனங்கள் மேம்பாலத்தின் அனுகு (சர்வீஸ்) சாலை வழியாக சென்று பிரகாசம் சாலை, பாஷ்யம் சாலை, தியாகராய சாலை, பர்கிட் சாலை வழியாக தி.நகர் பேருந்து நிலையத்தை அடையலாம்.

**மாற்றம்**

பர்கிட் சாலை மூப்பாரப்பன் தெரு சந்திப்பில் இருந்து மேட்லி நோக்கி செல்வதற்கு பேருந்துகள் மட்டும் அனுமதிக்கப்படும். மற்ற வாகனங்கள் மூப்பாரப்பன் தெரு, மூசா தெரு, தெற்கு தண்டபானி தெரு, மன்னார் தெரு வழியாக உஸ்மான் சாலை மூலம் தி.நகர் பேருந்து நிலையத்தை அடையலாம்.

**சிஜடி நகர்**

தி. நகர் பேருந்து நிலையத்திலிருந்து சைதாப்பேட்டை அண்ணா சாலையை அடைய தெற்கு உஸ்மான் சாலை சென்று கண்ணம்மாபேட்டை சந்திப்பை அடைந்து தென்மேற்கு போக் சாலையில் சென்று சிஜடி நகர் நான்காவது பிரதான சாலை, சிஜடி நகர் மூன்றாவது பிரதான சாலை சென்று அண்ணா சாலையை அஅடையலாம

சிஜடி நகர் 1வது பிரதான சாலையிலிருந்து வடக்கு உஸ்மான் சாலைக்குச் செல்லும் வாகனங்கள் கண்ணம்மா பேட்டை சந்திப்பில் தென்மேற்கு போக் சாலை வழியாகச் சென்று வெங்கட் நாராயணா சாலையில் சென்று நாகேஸ்வரன் ராவ் சாலை வழியாக வடக்கு உஸ்மான் சாலையை அடையலாம்.

தி.நகர் பேருந்து நிலையத்திலிருந்து வடக்கு உஸ்மான் சாலையை அடைய மேட்லி ரவுண்டனாவில் இருந்து பர்கிட் ரோடு சென்று வெங்கட் நாராயண சாலை வழியாக நாகேஸ்வர ராவ் சாலையில் இடதுபுறம் திரும்பி வடக்கு உஸ்மான் சாலையை அடையலாம்

வாகன ஓட்டிகளும், பொதுமக்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

### ஐ.பி.எல். கிரிக்கெட் சீசனில்

# அதிக முறை 400 ரன்களை கடந்த வீரர்களில் விராட் கோலி முதலிடம்

**ஐதராபாத், ஏப். 27-**

ஐ.பி.எல். சீசன் ஒன்றில் விராட் கோலி 400 ரன்னுக்கு மேல் எடுப்பது இது 10-வது முறையாகும். இதன் மூலம் அவர் புதிய சாதனை படைத்துள்ளார்.




**பெங்களூரு வெற்றி...**

10 அணிகள் இடையிலான 17-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் ஐதராபாத்தில் அரங்கேறிய 41-வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியுடன் மோதியது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 7 விக்கெட் இழப்பிற்கு 206 ரன்கள் குவித்தது. அடுத்து களமிறங்கிய ஐதராபாத் அணி, 20 ஓவர்கள் முழுமையாக ஆடி 8 விக்கெட் இழப்பிற்கு 171 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 35 ரன்கள் வித்தியாசத்தில் பெங்களூரு அணி வெற்றி பெற்று முந்தைய தோல்விக்கு பழிதீர்த்துக் கொண்டது.

**அதிக முறை 400 ரன்...**

இந்த ஆட்டத்தில் பெங்களூரு அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி அரைசதம் (51 ரன்கள்) அடித்தார். அவர் 22 ரன் எடுத்த போது நடப்பு தொடரில் 400 ரன்களை கடந்தார். ஐ.பி.எல். சீசன் ஒன்றில் அவர் 400 ரன்னுக்கு மேல் எடுப்பது இது 10-வது முறையாகும். இதன் மூலம் ஐ.பி.எல். போட்டியில் அதிக முறை 400 ரன்னுக்கு மேல் எடுத்த வீரர் என்ற பெருமையை பெற்றார். அவருக்கு அடுத்த இடத்தில் சுரேஷ் ரெய்னா, டேவிட் வார்னர் (தலா 9 முறை) உள்ளனர்.

# வெற்றியால் நிம்மதியாக தூங்குவோம்: பெங்களூரு கேப்டன் டு பிளெஸ்சிஸ்

**ஐதராபாத், ஏப். 27-**

ஐதராபாத்தை வீழ்த்தியதன் மூலம் நாங்கள் நிம்மதியாக தூங்குவோம் என்று பெங்களூரு அணி கேப்டன் பாப் டு பிளெஸ்சிஸ் தெரிவித்துள்ளார்.

**அபார வெற்றி...**

ரசிகர்களை மகிழ்வித்து வரும் ஐ.பி.எல். தொடரின் 17-வது சீசனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் ஆன சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 206 ரன்களை குவித்தது. பின்னர் 207 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சன்ரைசர்ஸ் அணியானது 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் பெங்களூரு அணி 35 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

**260 ரன்கள் வரை...**

இந்நிலையில் இந்த போட்டி முடிந்து தாங்கள் பெற்ற வெற்றி குறித்து பேசிய பெங்களூரு அணியின் கேப்டன் டு பிளெஸ்சிஸ் கூறுகையில் : கடந்த இரண்டு போட்டிகளாகவே நாங்கள் சிறப்பான போராட்டத்தை அளித்திருந்தோம். சன்ரைசர்ஸ் அணி 270 ரன்களுக்கு மேல் அடித்தும் நாங்கள் 260 ரன்கள் வரை சென்றோம். அதேபோன்று கொல்கத்தா அணிக்கு எதிரான போட்டியிலும் ஒரு ரன் வித்தியாசத்திலேயே தோல்வியை சந்தித்தோம். இப்படி நெருக்கமாக சென்று போட்டிகளை இழந்து வந்த வேளையில் ஒரு வெற்றி என்பது நிச்சயம் எங்களுக்கு தன்னம்பிக்கையை கொடுக்கும்.

**நாங்கள் நிம்மதியாக...**

வெற்றியின் மூலம் நாங்கள் நிம்மதியாக தூங்குவோம். போட்டியில் வெற்றி பெற்றால் நம்பிக்கை தானாக வெளிவரும். அந்த வகையில் இன்றைய போட்டியில் நாங்கள் வெற்றி பெற்றதில் மகிழ்ச்சி. இந்த தொடரின் ஆரம்பத்தில் விராட் கோலி மட்டுமே ரன்களை குவித்து வந்த வேளையில் தற்போது கேமரூன் கிரீன் ரன் குவித்து வருவது எங்களுக்கு நன்மை சேர்த்து உள்ளது. சின்னசாமி மைதானத்தில் வைத்து மற்ற அணிகளை வீழ்த்துவது கடினமாக இருந்த வேளையில் தற்போது வெளியில் கிடைத்துள்ள இந்த வெற்றி மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**தோல்விக்கு குறித்து...**

தோல்வி குறித்து பேசிய சன்ரைசர்ஸ் அணியின் கேப்டன் கம்மின்ஸ் கூறுகையில்., பந்துவீச்சில் சில ஓவர்களில் நாங்கள் அதிக ரன்களை விட்டுக் கொடுத்து விட்டோம். அதேபோன்று பேட்டிங்கிலும் அடுத்தடுத்து சில விக்கெட்டுகளை துவக்கத்திலேயே இழந்ததால் எங்களால் இலக்கை நோக்கி வெற்றிகரமாக செல்ல முடியாமல் போனது. முதலில் பேட்டிங் செய்தால் எங்களால் நிறைய ரன்களை அடிக்க முடிகிறது. அதுதான் எங்களது அணிக்கு வேலையும் செய்கிறது.

**நம்பி இருந்தோம்...**

ஆரம்பத்தில் சில வெற்றிகளை பெறுவதற்கு முன்னதாக நாங்கள் முதலில் பந்து வீசினால் வெற்றி பெறுவோம் என்று நம்பி இருந்தோம். ஆனால் அது எங்கள் வழியில் செல்லவில்லை. அதன் பின்னர் முதலில் பேட்டிங் செய்து வெற்றி பெற்று வந்தோம். இந்நிலையில் தற்போது மீண்டும் தோல்வியை தழுவியது வருத்தம் அளிக்கிறது. டி20 கிரிக்கெட்டில் எந்த ஒரு அணியுமே தொடர்ச்சியாக அனைத்து போட்டியிலும் வெற்றி பெற முடியாது. இந்த குறைகளை நீக்கி விட்டு நாங்கள் நிச்சயம் வெற்றி பாதைக்கு திரும்புவோம். இவ்வாறு அவர் கூறினார்.

### பாராளுமன்ற 2-ம் கட்ட தேர்தல்:

# பெங்களூருவில் ராகுல் டிராவிட், அனில் கும்ப்ளே வாக்களித்தனர்

**பெங்களூரு, ஏப். 27-**

கர்நாடகத்தில் மொத்தமுள்ள 28 தொகுதிகளில் முதல்கட்டமாக 14 தொகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது. இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும் தற்போதைய தலைமை பயிற்சியாளருமான ராகுல் டிராவிட் பெங்களூருவில் வாக்களித்தார்.

**14 தொகுதிகளுக்கு...**

543 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 28 இடங்களைக் கொண்ட கர்நாடகத்தில், உடுப்பி சிகாமகளூரு, ஹாசன், தட்சிண கன்னடா, சித்ரதுர்கா, தும்கூர், மாண்டியா, மைசூரு, சாமராஜநகர், பெங்களூரு கிராமம், பெங்களூரு வடக்கு, பெங்களூர் சென்ட்ரல், பெங்களூரு தெற்கு, சிக்பல்லாபூர், கோலார். ஆகிய 14 தொகுதிகளுக்கு வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்றது. மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடைந்தது.

**டிராவிட் - கும்ப்ளே...**

கர்நாடகத்தில் 2019 தேர்தலில் மொத்தமுள்ள 28 இடங்களில் 25 இடங்களை பாஜக கைப்பற்றியது. இந்த முறை பாஜக 25 இடங்களில் போட்டியிடுகிறது, மீதமுள்ள 3 இடங்களில் அதன் மாநில கூட்டணி கட்சியான ஜேடிஎஸ் போட்டியிடுகிறது. ஜேடிஎஸ் ஹாசன், மாண்டியா மற்றும் கோலார் ஆகிய மூன்று தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்த நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனும் தற்போதைய தலைமை பயிற்சியாளருமான ராகுல் டிராவிட் பெங்களூருவில் தனது வாக்கை பதிவு செய்தார். இதேபோன்று டிராவிட்டின் முன்னாள் சக வீரரும், பழம்பெரும் இந்திய சுழற்பந்து வீச்சாளருமான அனில் கும்ப்ளே பெங்களூருவில் தனது வாக்கை பதிவு செய்தார்.

# ஐதராபாத்தை வீழ்த்தியது பெங்களூரு

**பெங்களூரு, ஏப். 27-**

முதலில் டாஸ் வென்ற பெங்களூரு அணி கேப்டன் பாப் டு பிளெசிஸ் பேட்டிங் செய்ய முடிவெடுத்தார். அதேபோல விராட் கோலி மற்றும் பாப் டு பிளெசிஸ் ஆரம்பம் முதலே அதிரடி காட்ட தொடங்கினர். 3 பவுண்டர்கள், 1 சிக்சர் என அதிரடியாக விளையாடிக் கொண்டிருந்த டு பிளெசிஸ், 4-வது ஓவரின் கடைசி பந்தில் நடராஜன் வேகத்தில் கேட்ச் கொடுத்த தனது விக்கெட்டை இழந்தார்.

**கோலி அரைசதம்...**

வில் ஜாக்ஸூம் 6 ரன்கில் வெளியேற, விராட் கோலி – ரஜத் பட்டிதார் ஜோடி அதிரடி காட்ட தொடங்கியது. 11ஆவது ஓவரில் மட்டும் 3 சிக்ஸர்கள் அடித்து 26 ரன்கள் எடுத்து அபாரமாக 50 ரன்களை கடந்தார். ஆனால் அடுத்த பந்திலேயே உனத்கட் வேகத்தில் அப்துல் சமதிடம் கேட்ச் கொடுத்து தனது விக்கெட்டை இழந்தார். இதையடுத்து விராட் கோலி – கிரீன் ஜோடி பொறுமையாக விளையாடி அரைசதம் கடந்த விராட் கோலி, 51 ரன்களில் உனட்கட் பவுலிங்கில் ஆட்டமிழக்க, பிறகு வந்த லோமரோர் வந்த வேகத்தில் நடையை கட்டினார். 207 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணி விளையாடியது.

**6 விக்கெட்களை...**

20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 171 ரன்கள் எடுத்தது ஐதராபாத். இதன் மூலம் ஆர்சிபி வெற்றி பெற்றது. அந்த அணி இதற்கு முன்பாக தொடர்ந்து 6 போட்டிகளில் தோல்வியை தழுவி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஆர்சிபி பவுலர்கள் ஸ்வப்னில் சிங், கரண் சர்மா, கிரின் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

### சுட்டெரிக்கும் கோடை வெயில்:

# தொழிலாளர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்க அறிவுறுத்தல்

**சென்னை, ஏப். 27-**

சுட்டெரிக்கும் கோடை வெயிலை அடுத்து பாதிக்காதவகையில் தொழிலாளர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்னரே கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. வழக்கத்தை விட பகலில் 3 டிகிரி முதல் 5 டிகிரி வரையிலும் வெப்பநிலை அதிகரித்துள்ளது. பகலில் கொளுத்தும் வெயிலில் அனல் காற்று வீசியதால் பெரும்பாலானவர்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் வெயிலை எதிர்கொள்ள தொழிலாளர்களுக்கு தேவையான உரிய வசதிகளை செய்து தருமாறு தொழிற்சாலைகள், கட்டடப்பணி, கல்-குவாரி, சாலை அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் அறிவுறுத்தி உள்ளது.

காலையில் விரைவாக பணியை தொடங்கி, மதிய வேளையில் தொழிலாளர்களுக்கு இடைவேளை அளிக்க வேண்டும்; மாலையில் வெயில் குறைந்த பிறகு பணிகளை தொடங்க வேண்டும். பணி இடத்தில் போதுமான குடிநீர், நிழற்கூடங்கள் மற்றும் முதலுதவி வசதி ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழிற்சாலைகளுக்கு உள்ளே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும். வெப்பம் அதிகமான துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களை சுழற்சி முறையில் பணியாற்றும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தொழிற்சாலைகளில் கழிவறைகளை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தோனேசிய வீராங்கனை சாதனை




மங்கோலியா பெண்கள் கிரிக்கெட் அணி இந்தோனேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 6 ஆட்டங்கள் அடங்கிய சர்வதேச 20 ஓவர் தொடரில் பங்கேற்றது. இதன் 5-வது ஆட்டம் பாலியில் நேற்று நடந்தது. முதலில் பேட் செய்த இந்தோனேசியா 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 151 ரன்கள் சேர்த்தது. தொடர்ந்து ஆடிய மங்கோலியா 16.4 ஓவர்களில் வெறும் 24 ரன்னில் சுருண்டது. இதனால் இந்தோனேசியா 127 ரன்கள் வித்தியாசத்தில் தொடர்ந்து 5-வது வெற்றியை ருசித்தது.

அறிமுக வீராங்கனையாக அடியெடுத்து வைத்த இந்தோனேசியா சுழற்பந்து வீச்சாளர் 17 வயதான ரொமாலியா, 3.2 ஓவர் பந்து வீசி 3 மெய்டனுடன் ஒரு ரன் கூட விட்டுக்கொடுக்காமல் 7 விக்கெட்டுகளை அறுவடை செய்தார். சர்வதேச பெண்கள் 20 ஓவர் கிரிக்கெட்டில் ஒரு வீராங்கனையின் சிறந்த பந்து வீச்சு இதுவாகும். இதற்கு முன்பு நெதர்லாந்தின் பிரடெரிக் ஓவர்டிக் 2021-ம் ஆண்டில் பிரான்சுக்கு எதிராக 3 ரன்னுக்கு 7 விக்கெட் எடுத்ததே சிறந்த பந்து வீச்சாக இருந்தது. இதைத் தொடர்ந்து நடந்த கடைசி 20 ஓவர் போட்டியிலும் இந்தோனேசியா அபார வெற்றி பெற்றது. இதில் மங்கோலியா நிர்ணயித்த 52 ரன் இலக்கை இந்தோனேசியா 9.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி எட்டிப்பிடித்தது.

## பாண்ட்யா குறித்து ஆடம் கில்கிறிஸ்ட்

தற்போது நடைபெற்று வரும் சீசனில் மும்பை அணியின் தோல்விகளுக்கு பேட்டிங், பவுலிங் ஆகிய இரண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தாத பாண்ட்யா கேப்டனாகவும் சுமாராக முடிவுகளை எடுத்தது முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. அந்த சூழ்நிலையில் ஏற்கனவே ரோகித் சர்மாவுக்கு அடுத்ததாக இந்திய டி20 அணியின் கேப்டனாக ஹர்திக் பாண்ட்யாவை பி.சி.சி.ஐ. தீர்மானித்துள்ளது. அதனாலேயே டி20 போட்டிகளில் சில காலம் ஓய்வெடுத்த ரோகித்துக்கு பதிலாக ஹர்திக் பாண்ட்யா பல தொடர்களில் இந்தியாவின் கேப்டனாக செயல்பட்டார்.

இந்நிலையில் நுணுக்கங்கள் ரீதியாக பாண்ட்யா இன்னும் கேப்டனாக வளரவில்லை என ஆடம் கில்கிறிஸ்ட் கூறியுள்ளார். எனவே அவரை டி20 அணியின் அடுத்த கேப்டனாக நியமித்தால் அது இந்தியாவை பாதாளதுக்கு தள்ளிவிடும் என்று பி.சி.சி.ஐ.யை மறைமுகமாக எச்சரிக்கும் அவர் இது பற்றி பேசியது பின்வருமாறு:- “நுணுக்கமான திட்டங்கள் ரீதியாக அவர் தனது வேலையை சரியாக செய்வதை நான் பார்க்கவில்லை. சில நேரங்களில் அவர் பேட்டிங் வரிசையில் சில மாற்றங்கள், பந்து வீச்சில் சில மாற்றங்கள் செய்கிறார். ஒட்டுமொத்தமாக கேப்டன்ஷிப்புக்கு தேவையான உத்திகளை அவர் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன்” என கூறினார்.

## டெல்லி அணியில் குல்படின் நைப்

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியில் இடம்பிடித்திருந்த ஆஸ்திரேலிய ஆல்-ரவுண்டர் மிட்செல் மார்ஷ் தசைபிடிப்பால் அவதிப்படுகிறார். இதையடுத்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தின் அறிவுறுத்தலின் பேரில் அவர் தாயகம் திரும்பி விட்டார். அவருக்கு பதிலாக ஆப்கானிஸ்தான் அணியின் ஆல்-ரவுண்டர் குல்படின் நைப்பை அடிப்படை விலையான ரூ.50 லட்சத்துக்கு அந்த அணி ஒப்பந்தம் செய்துள்ளது. 20 ஓவர் கிரிக்கெட்டில் 65 சர்வதேச ஆட்டங்களில் விளையாடி உள்ள குல்படின் நைப் 3 அரைசதம் உள்பட 807 ரன்களும், 26 விக்கெட்டும் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சதுப்பு நிலங்களை அடையாளம் காண உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஏப். 27-**

சதுப்பு நிலங்களை அடையாளம் காண வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது

தமிழகம் முழுவதும் சதுப்பு நிலங்களை அடையாளம் காண வேண்டும் எனவும் சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணியை ஜூன் மாதம் முதல் துவங்க வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. 2018ம் ஆண்டு தாமாக முன் வந்து விசாரணைக்கு எடுத்த வழக்கில் தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட்டு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. மேலும் சதுப்பு நிலங்களை அடையாளம் காணும் பணி குறித்து அவ்வப்போது அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் நிபுணர்களின் சேவையை பயன்படுத்திக் கொள்ளவும் தமிழக அரசுக்கு அனுமதி அளித்து ஐகோர்ட்டு உத்தரவிட்டது. மேலும் இந்த வழக்கு விசாரணை ஜூலை மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

### இ.வி.எம். வழக்கில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

# எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்த அடி: பிரதமர் நரேந்திர மோடி தாக்கு

**பாட்னா, ஏப். 27-**

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு எதிராக அழுது கொண்டிருந்த எதிர்க்கட்சிகளின் முகத்தில் சுப்ரீம் கோர்ட்ம் பலமாக அறைந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு நடப்பதாக எதிர்க்கட்சிகள் உட்பட பலதரப்பினர் குற்றச்சாட்டு முன்வைத்துவந்த நிலையில், வாக்கு எண்ணிக்கையின்போது விவிபாட் ஒப்புகை சீட்டுகளையும் 100 சதவிகிதம் சரிபார்க்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, தீபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, ``இந்தியாவின் மக்கள்தொகை அதிகம். இப்போது வாக்குச் சீட்டு நடைமுறை என்பது சாத்தியமற்றது. தொழில்நுட்ப ரீதியாகத் தேர்தல் ஆணையம் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு அமைப்பை கண்மூடித்தனமாக நம்பாமலிருப்பது தேவையில்லாத சந்தேகங்களுக்கு வழிவகுக்கும். அரசியலமைப்பின் ஒரு அதிகார அமைப்பான தேர்தல் ஆணையத்தின் மீது நாங்கள் அதிகாரம் செலுத்த முடியாது. எனவே தேர்தல்களை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது. அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்கிறோம். எனவே, இந்த வழக்கின் கோரிக்கையை நடைமுறையில் உள்ள நெறிமுறை, தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் பதிவில் உள்ள தரவுகளின் அடிப்படையில் நிராகரிக்கிறோம்'' எனத் தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பு தொடர்பாக பீகார் மாநிலம் அரரியாவில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, ``நமது ஜனநாயகத்திற்கு மங்களகரமான நாள். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு எதிராக அழுது கொண்டிருந்த எதிர்க்கட்சிகளின் முகத்தில் சுப்ரீம் கோர்ட் பலமாக அறைந்துள்ளது. நமது ஜனநாயகம் மற்றும் தேர்தல் நடைமுறையை உலகமே போற்றிக்கொண்டிருக்கும்போது, எதிர்க்கட்சிகள் தங்களது தனிப்பட்ட நலன்களுக்காக அதையே அவதூறாகப் பேசுகின்றன.

அதற்காக அவர்கள் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். எஸ்சி, எஸ்டி, ஓபிசி ஆகியோரின் உரிமைகளை பறிக்க காங்கிரஸ் சதி செய்திருக்கிறது. இதை நான் மிகுந்த பொறுப்புடன் தெரிவிக்கிறேன். ஏனென்றால், அம்பேத்கர், இந்தியாவில் மத அடிப்படையிலான இட ஒதுக்கீடு இருக்க முடியாது என்று மிகத் தெளிவான வார்த்தைகளில் கூறியிருக்கிறார். ஆனால் மத அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை அமல்படுத்த காங்கிரஸ் தன்னால் இயன்றவரை முயற்சி செய்து வருகிறது. கர்நாடகாவில் அமல்படுத்தியதைப் போல இட ஒதுக்கீட்டை நாடுமுழுவதும் அமல்படுத்த முயற்சிக்கிறது.

காங்கிரஸ் மக்களுக்கு துரோகம் செய்துவிட்டனர். கர்நாடகாவின் அனைத்து முஸ்லிம்களையும் அவர்களின் நிதி நிலையைப் பொருட்படுத்தாமல் ஓபிசி பட்டியலில் சேர்த்துள்ளனர். பல ஆண்டுகளாக மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்த அனுமதிக்கவில்லை. வாக்களிக்க மக்களை வெளியே கூட விடவில்லை. ஆனால் இப்போது, ஏழை மற்றும் நேர்மையான வாக்காளர்களுக்கு இ.வி.எம்.-ன் பலம் இருக்கும்போது, எதிர்க்கட்சிகள் அதை நீக்க தங்களால் முடிந்த அனைத்தையும் முயற்சிக்கின்றனர்.'' எனத் தெரிவித்திருக்கிறார்.

# காங்கிரஸ் அரசு கோடிக்கணக்கான மக்களை லட்சாதிபதிகளாக்கும்

## ராகுல் காந்தி பேச்சு

**பெங்களூரு, ஏப். 27-**

காங்கிரஸ் அரசு கோடிக்கணக்கான மக்களை லட்சாதிபதிகளாக்கும் என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கர்நாடக மாநிலம் பிஜப்பூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசியதாவது:- பிரதமர் மோடியின் பேச்சுகளை சில நாட்களாக பார்க்கிறீர்கள்; அவர் பதற்றமாக இருக்கிறார். 24 மணி நேரமும் மக்களை திசை திருப்பும் முயற்சியில் பிரதமர் ஈடுபடுகிறார். முதற்கட்ட தேர்தலுக்கு பிறகு அவர் பீதி அடைந்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் ஏழைகளிடம் இருந்து பணத்தை மட்டுமே பிரதமர் பறித்துள்ளார். நாட்டின் 70 கோடி மக்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ அதே அளவு பணத்தை 22 பேருக்கு கொடுத்துள்ளார். வேலையில்லா திண்டாட்டம் மற்றும் பணவீக்கத்தை சரி செய்ய காங்கிரஸ் கட்சிக்கு வாக்களியுங்கள். அக்னிபத் திட்டத்தை கொண்டு வந்து இளைஞர்களிடம் இருந்து ராணுவ பணியை பறித்துள்ளார்.

கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியுள்ளோம். இதன் மூலம் மக்கள் பயன் அடைந்து வருகின்றனர். பிரதமர் மோடி சிலரை கோடீஸ்வரர்களாக்கினார்; ஆனால் காங்கிரஸ் அரசு கோடிக்கணக்கான மக்களை லட்சாதிபதிகளாக்கும். இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.

# விமான நிலைய குப்பை தொட்டியில் கிடந்த ரூ.75 லட்சம் மதிப்பிலான தங்கம்

**சென்னை, ஏப். 27-**

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலைய குப்பை தொட்டியில் ரூ.75 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையத்தில் சமீப காலமாக அதிகளவு கடத்தல் தங்கம் பிடிபட்டு வருகிறது. இதன் காரணமாக, விமான நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலைய குப்பை தொட்டியில் ரூ.75 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து விமான நிலைய ஊழியர்கள் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் விரைந்து வந்து குப்பை தொட்டியில் இருந்து மீட்கப்பட்ட தங்க நகைகளை கைப்பற்றினர். குப்பை தொட்டியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட தங்க நகைகளின் எடை சுமார் 1.2 கிலோ என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தங்கம் கடத்தி வந்த நபர் யார்? எந்த விமானத்தில் வந்தார்? என்பது குறித்து விமான நிலையத்தில் உள்ள சி.சி.டி.வி. கேமராவை சுங்கத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அப்போது அந்த நபர் சி.சி.டி.வி.யை பார்க்காதபடி நகையை குப்பை தொட்டியில் போட்டு செல்வது தெரிய வந்துள்ளது. இது குறித்து சுங்கத்துறை அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காஷ்மீரில் எண்கவுன்டர்: 2 பயங்கரவாதிகள் பலி

**ஜம்மு, ஏப். 27-**

ஜம்மு காஷ்மீரில் நடந்த துப்பாக்கி சூட்டில் 2 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தின் சோபோர் பகுதியில் உள்ள செக் மொஹல்லா நவ்போராவில் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கி சூடு நடைபெற்றது. இந்த துப்பாக்கி சூடு நேற்று முன்தினம் நள்ளிரவில் அமைதிக்கு வந்த பிறகு நேற்று காலை மீண்டும் தொடங்கியது.

இந்த துப்பாக்கி சூட்டில் 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், 2 பாதுகாப்புப் படை வீரர்கள் காயமடைந்ததாகவும் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் இதில் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் இந்த துப்பாக்கி சூட்டில் அப்பகுதியை சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பாதுகாப்புப் படை அதிகாரி தெரிவித்துள்ளார். அப்பகுதியில் இருந்து பயங்கரவாதிகளை விரட்டும் பணியில் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.



**கோட்டகுப்பம் எம்.இ. சேட் மரைக்காயரின் பேரனும் எஸ்.ஆசாருதீன்- ஏ.மரியம் ஜைனம் தம்பதியினரின் மகனுமான முகமது ஏ.அயாசுதீனின் முதல் பிறந்த நாளை முன்னிட்டு புரட்சிதமிழர் எடப்பாடியார் பொதுநல சங்கத்தின் நிறுவனர், தலைவர் எஸ்.என்.ஆர். ராஜேஷ் என்கிற விவேகானந்தன், மாநில செயலாளரும், திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளருமான திருவேற்காடு டாக்டர் ச. வெங்கடேசன், வடபழனி ஜின்னா, என்.ஏழுமலை, ஜெ.ஆர்.ஸ்ரீ கபாலி மற்றும் மனோகர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.**




● தலைமைச்செயலகத்தில் நேற்று, தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, மக்களவைத் தேர்தல் 2024 வாக்கு எண்ணிக்கை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரி சங்கர்லால்குமாவத், இணை தலைமை தேர்தல் அதிகாரி ஸ்ரீகாந்த், கடலூர் மாவட்ட கலெக்டர் அருண் தம்புராஜ் கலந்து கொண்டனர்.

# எந்த ஆய்வும் நடத்தாமல் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிப்பது சரியா..?

## மத்திய அரசுக்கு சென்னை ஐகோர்ட் கேள்வி

சென்னை, ஏப். 29-

"எந்தவித அறிவியல் பூர்வமான ஆய்வும் நடத்தாமல் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோக திட்டம் எப்படி அமல்படுத்தப்படும்?" என கேள்வி எழுப்பியுள்ள சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளிக்க உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், கடலூர் மாவட்டம் முருகன்குடியைச் சேர்ந்த கனிமொழி என்பவர் தாக்கல் செய்த மனுவில், "நாடு முழுவதும், மக்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த திட்டம் தமிழகத்தில் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் அமல்படுத்தப்பட உள்ளது. ரேஷன் கடைகள், பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவு திட்டத்தின் கீழ் இந்த அரிசி வழங்கப்பட உள்ளது. உடல் நலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத் திட்டத்தை செயல்படுத்தத் தடை விதிக்க வேண்டும்" என்று மனுவில் கூறியிருந்தார்.

இதேபோல், "தலசீமியா, அமீனியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்கள் ஆலோசனைப்படி தான் செறிவூட்டப்பட்ட அரிசியை உண்ண வேண்டும். இந்த எச்சரிக்கை வாசகம் செறிவூட்டப்பட்ட அரிசி பையில் இடம்பெறாமல் விநியோகிக்கப்படுவதாக" கூறி, பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் வழக்கறிஞர் வெற்றிச்செல்வன் என்பவரும் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்குகள் தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், "அனைத்து ரேஷன் கடைகளின் முன்பும், தலசீமியா, அமீனியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்கள் ஆலோசனைப்படி தான் செறிவூட்டப்பட்ட அரிசியை உண்ண வேண்டும் என விளம்பர பலகை வைக்கப்பட்டுள்ளது. எனவே, அரிசி பைகளில் எச்சரிக்கை வாசகம் இடம்பெறச் செய்யத் தேவையில்லை" என்று வாதிட்டார். அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சேவியர் அருள்ராஜ், "எந்த விதமான அறிவியல்பூர்வமான ஆய்வும் நடத்தாமல் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது. பாராளுமன்றத்திலும் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "இந்தத் திட்டம் பாராட்டத்தக்கதாக இருந்தாலும், எந்த அறிவியல் பூர்வமான ஆய்வும் நடத்தாமல் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத் திட்டம் எப்படி அமல்படுத்தப்படும்?" என்று வினவினர். மேலும், இந்த அரிசியை உண்ணக்கூடாதவர்களை எப்படி கண்காணிக்கப் போகிறீர்கள் என்பது குறித்து மத்திய அரசு விளக்கம் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 19-ம் தேதிக்கு தள்ளி வைத்தனர்.



● கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகம் முன்பு நீர், மோர் பந்தலை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். அருகில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ். பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், டாக்டர் சரவணன், கணேஷ்பிரபு, வி.பி.ஆர்.செல்வகுமார், சண்முகவள்ளி, எம்.எஸ்.கே.மல்லன், எஸ்.டி.ஜெயபாலன், சுகந்தி அசோக், கே.ஜெயவேல், ஏ.பார்த்திபன், ஜெ.மாணிக்கம், எம்.ஜி. ராமச்சந்திரன், சக்தி விநாயகர் பாண்டின், ஆர்.பாஸ்கரன், வக்கீல் அசோகன், எம்.எஸ்.செந்தில்குமார், கே.கலைசெல்வம், ஜோசப்தனிஸ்லாஸ், விளாங்குடி சித்தன், கார்னர் பாஸ்கர், மார்க்கெட் மார்நாடு, ராதா உள்ளனர்.

### தமிழகத்தில் எம்.எல்.ஏ.க்கள் அலுவலகங்களை

# திறக்க அனுமதி கோரி தலைமை தேர்தல் அதிகாரி சாகுக்கு கடிதம்

சென்னை, ஏப். 27-

தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் எம்.எல்.ஏ. அலுவலகங்களை திறக்க கோரி தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கு சத்தியபிரதா சாகுக்கு எம்.எல்.ஏ.க்கள் மனு அனுப்பியுள்ளனர்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் கடந்த 19-ம் தேதி நடந்து முடிந்தது. வாக்குப்பதிவு நிறைவு பெற்ற நிலையில், மக்களவைத் தேர்தலுக்கான நடத்தை விதிகள் அனைத்தும் வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி முடியும் வரை அமலில் இருக்கும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதன் காரணமாக தேர்தலை முன்னிட்டு தமிழகம் முழுவதும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகங்கள், பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகங்கள் அனைத்து சீல் வைத்து மூடப்பட்டு உள்ளது. இந்நிலையில் தேர்தல் நிறைவடைந்த நிலையில் அனைத்து அலுவலகங்களையும் திறக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரிக்கு இ-மெயில் மூலம் கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர்.

அந்த மனுவில், பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், தங்களது அன்றாட பணிகளை மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகங்களை திறக்க வேண்டும் என்று அவர்கள் தலைமை தேர்தல் அதிகாரிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். எம்.எல்.ஏ.க்கள் மனுக்கள் மீது ஓரிரு நாளில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

# வட தமிழ்நாடு உள் மாவட்டங்களில்.... (1-ம் பக்க தொடர்ச்சி)

வரும் 30-ம் தேதி வரை தமிழக உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும். வட தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த ஐந்து தினங்களில் அதிகபட்ச வெப்பநிலை 3 டிகிரி-5 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை வட தமிழக உள் மாவட்டங்களின் ஒருசில இடங்களில் 39 டிகிரி-42 டிகிரி செல்சியஸ், இதர தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் 35 டிகிரி-39 டிகிரி செல்சியஸ் இருக்கக்கூடும். வரும் 30-ம் தேதி வரை காற்றின் ஈரப்பதம் தமிழக உள் மாவட்டங்களின் சமவெளி பகுதிகளில் பிற்பகலில் 30-50 சதவீதமாகவும், மற்ற நேரங்களில் 40-75 சதவீதமாகவும் மற்றும் கடலோரப்பகுதிகளில் 50-80 சதவீதமாகவும் இருக்கக்கூடும்.

வரும் 30-ம் தேதி வரை வட தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும். இதர தமிழக மாவட்டங்கள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது ஓரிரு இடங்களில் அசவுகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# 2-ம் கட்ட தேர்தலில் வாக்களித்த பிரபலங்கள்



● ராஜஸ்தான், ஜோத்பூர் தொகுதியில் முன்னாள் முதல்வர் அசோக் கெலாட் வாக்களித்தார்.



● கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கனகபுராவில் வாக்களித்தார்.



● கர்நாடகா, பெங்களூரு தொகுதியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வாக்களித்தார்.



● கேரளா, கண்ணூர் தொகுதியில் கேரள முதல்வர் பினராயி விஜயன் வாக்களித்தார்.



● கர்நாடகா, பெங்களூரு தொகுதியில் நடிகர் பிரகாஷ்ராஜ் வாக்களித்தார்.



● கேரளா, திருவனந்தபுரம் காங்கிரஸ் வேட்பாளர் சசி தரூர் வாக்களிக்க வரிசையில் நிற்கும் காட்சி.

### வெடிகுண்டு மிரட்டல் எதிரொலி:

# சென்னை விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

கொல்கத்தா, ஏப். 27-

இந்தியாவில் டெல்லி உள்பட 4 விமான நிலையங்களுக்கு இமெயில் மூலம் மர்ம நபர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

டெல்லி, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத் விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர். கொல்கத்தா விமான நிலைய மேலாளருக்கு தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட மிரட்டலை அடுத்து கண்காணிப்பு தீவிரபடுத்தியுள்ளனர். 4 விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து சென்னையிலும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

நேற்று காலை கொல்கத்தா விமான நிலைய மேலாளருக்கு இமெயில் மூலம் மர்ம நபர் ஒருவர் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளார். அந்த இமெயிலில் விமான நிலையங்களில் குண்டு வெடிக்கும் என்று குறிப்பிட்டு அனுப்பியிருந்தார்.

இந்த வெடிகுண்டு மிரட்டலை அடுத்து நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டது. சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

வெடிகுண்டு மிரட்டலை அடுத்து சென்னை உட்பட நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மிரட்டலை அடுத்து சென்னை விமான நிலையத்தில் பிற்பகலில் இருந்து 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டது. விமான பயணிகள், உடைமைகள், விமானங்களில் ஏற்றப்படும் பார்சல்கள் அனைத்தும் தீவிரமாக பரிசோதிக்கப்பட்டன.

உள்நாடு மற்றும் சர்வதேச முனையங்களில் இருந்து விமானங்களில் பயணிக்க வரும் பயணிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். கூடுதல் சோதனைகள் காரணமாக உள்நாட்டு விமான பயணிகள், விமானம் புறப்படும் நேரத்திற்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாக வர அறிவுறுத்தப்பட்டிருந்தனர். சர்வதேச விமான பயணிகளும் 3 மணி நேரம் முன்னதாக விமான நிலையத்திற்கு வரும்படி அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

# சுப்ரீம் கோர்ட் வழக்கு விசாரணை விவரங்கள் இனி வாட்ஸ் அப்பில்: தலைமை நீதிபதி அறிவிப்பு

புதுடெல்லி, ஏப். 27-

"சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படும் வழக்கு, விசாரணை உள்ளிட்ட விவரங்களை அந்தந்த வழக்கறிஞர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் அனுப்பப்படும்" என தலைமை நீதிபதி சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

இன்றைய கால கட்டத்தில் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மெயில் மூலம் மட்டுமின்றி வாட்ஸ் அப் மூலம் ஊழியர்களுக்கு தகவல்களை தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக நேரம் மிச்சமாவதோடு மட்டுமல்லாமல், விரைவாகவும் தகவல்கள் தெரிய படுத்தப்பட்டு வருகிறது. இந்த சூழலில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் முக்கிய உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதாவது சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படும் வழக்கு, விசாரணை உள்ளிட்ட விவரங்களை அந்தந்த வழக்கறிஞர்களுக்கு வாட்ஸ் அப் மூலம் அனுப்பப்படும் என தெரிவித்துள்ளார்.

சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற தனியார் சொத்துகளை அரசு கையகப்படுத்தி பொது நலனுக்காக பயன்படுத்துவது தொடர்பான வழக்கை சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது. அந்த விசாரணையின் போது, நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் இந்த அறிவிப்பை வெளியிட்டார். சுப்ரீம் கோர்ட் தகவல்தொழில்நுட்பச் சேவையில் வாட்ஸ்ஆப் சேவையும் இணைக்கப்படும் என்று அவர் அறிவித்தார்.